இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -21 வெற்றி -04


# நேர்மை நெறி


ஏப்ரல் 2023

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

**(NERMAI NERI)** **(Reg.No.349/2001)**


**செப்பன் உடையவன் ஆக்கம் சிதைவின்றி**
**எச்சத்திற் கேமாப்பு உடைத்து.**


**₹ 10**


## ஊழல்களை மறைத்துவிட்டால் ஊழலற்ற ஆட்சி ஆகிவிடுமா?




## ஊழல் நம் நாட்டின் சாபம்


**PUBLISHED BY**

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, "நம்பகம்",
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell: 044 2674 1007
e-mail:acmchennai2001@yahoo.co.in
website:anticorruptionchennai.com

## தலைவர் மடல்

அன்பார்ந்த மூத்தோர்களே, சகோதரர்களே, சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வணக்கம். 2007ம் ஆண்டு நான் கண்ட ஊழல் எதிர்ப்பு இயக்கம் மிகவும் சக்தி வாய்ந்த இயக்கமாக இருந்தது.

ஊழல் என்ற சொல் தனிமனிதன் முதல் உலகில் உள்ள அனைத்து விதமான மக்களிடம் இப்பொழுது உச்சத்தை அடைந்துள்ளது. ஊழல் உச்சத்தை அடைய கராணம் ஒவ்வொரு தனிமனிதனின் சுயநலமே! ஏனென்றால், ஒவ்வொரு ஊழல்வாதியும் ஊழல் ஊற்றினால லட்சக்கணக்கான கோடிகளைக் கொள்ளையடித்து வலம் வரும் சமூக கொள்ளையர்கள் ஆயினர். அரசியல்வாதிகளையும் கொள்ளைகரார்களையும் பார்த்து சாமானிய மனிதனும் பணம் என்னும் போதையால் பாதை மாறிவிட்டார்கள்! ஆசை யாரை விட்டது?

அதுவும் மாநில அரசுகள்/மத்திய அரசின் நல திட்டங்களில் செலவிடும் 100 ரூபாயில் மக்களுக்குப் போய் சேரும் போது வெறும் 30ரூபாய் தான் உண்மையில்கிடைக்கிறது. இதில் மத்திய மாநில அரசுகள் மூழ்கிவிட்ட நிலையை பார்க்கும் போது சாமனியனுக்கும் ஆசை வந்துள்ளது. இதுதான் நமது நாட்டில் ஊழல் உச்சத்தை அடைய காரணம் ஆகும். நமது ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் மாவட்ட மற்றும் கிளை அமைப்புகளின் செயல்கள் அவர் அவர்கள் பகுதியில் உள்ள ஒவ்வொரு அரசு இயந்திரத்தையும் நிலைகுலையச் செய்து கொண்டு இருந்தது. ஒரு கிராமத்தில் இருக்கும் தலையாரி, கிராம நிர்வாக அதிகாரி, வட்டாச்சியர், கோட்டாசியர் மற்றும் மாவட்ட ஆட்சியாளர் என அசைத்து பார்த்த இயக்கம்தான் நமது ஊழல் எதிர்ப்பு இயக்கம். நாம் மீண்டும் பழைய நிலைக்கு திரும்ப வேண்டும் என இயக்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் செயலாளர்களையும், தலைவர்களையும் அன்புடன் வேண்டுகிறேன் .

**வெ. அய்யப்பன்**
**தலைவர்**



## விழிப்புணர்வு பதிவு....
## லஞ்ச ஒழிப்புத்துறை எவ்வாறு செயல்படுகிறது.....

**வே கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் செயல்படும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு போலீஸார், (லஞ்ச ஒழிப்புத்துறை), அந்தந்த மாவட்டத்தின் எஸ்.பி. கட்டுப்பாட்டிலோ, அல்லது கலெக்டரின் கட்டுப்பாட்டிலோ கிடையாது.

லஞ்ச ஒழிப்பு துறை அமைப்பானது, முற்றிலும், சென்னையில் தலைமைச் செயலகத்தில் இயங்கி வரும் CHIEF SECRETARY அந்தஸ்த்தில் உள்ள VIGILANCE COMMISSIONER- அவர்களின் கட்டுப்பாட்டிலும், சென்னை ஆலந்தூரில் உள்ள DGP அல்லது ADDL.DGP அந்தஸ்த்தில் உள்ள ஒரு மூத்த IPS அதிகாரியின் தலைமையில் இயங்கிவரும் DVAC என்றழைக்கப்படும் "Directorate of Vigilance and Anti-Corruption" என்ற இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டிலும் மட்டும்தான் செயல்படுகின்றன.

இன்னும் சொல்லப்போனால், மேற்சொன்ன மாவட்ட அதிகாரிகளின் செயல் பாடுகளையே கண்காணித்து, தவறு இருப்பின் நடவடிக்கை எடுக்க கடமைப்பட்டவர்கள்.

லஞ்ச ஒழிப்புச்சட்டம்-என்று அழைக்கப்படும் PREVENTION OF CORRUPTION ACT 1988- பிரிவு 2 பிரகாரம், அரசுப்பணியில் உள்ள அரசு ஊழியர்கள் மட்டுமின்றி, மக்களால் பொதுப்பணிக்கென தேர்ந்தெடுக்கப்படும. பஞ்சாயத்து போர்டு தலைவர், வார்டு உறுப்பினர்கள், நகரம், மாவட்டம் மற்றும் முனிசிபல் கவுன்சிலர்கள், சேர்மேன் மற்றும் அரசு நிர்வாகத்தில் உள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளும்( "PUBLIC SERVANTS" )என்ற வரையரறைக்குட்பட்டதால், கடைநிலையில் உள்ள ஒரு வி.எ.ஓ.-வை எப்படி நூறுக்கும், இருநூறுக்கும், அந்தச்சட்டத்தின் கீழ், எளிதில் பொறி வைத்துப் பிடிக்கிறார்களோ, அதேபோல் பொறிவைப்பு நடவடிக்கைக்கு உட்பட்டவர்கள்தான். சமீபத்தில், திருச்சி, நாகப்பட்டினம் மற்றும் பல மாவட்டங்களில், பஞ்சாயத்துபோர்டு தலைவர்களைக்கூட லஞ்சஒழிப்பு போலீஸார் பொறிவைத்து பிடித்துள்ளார்கள். அரசு அதிகாரிகள், ஊழியர்கள் லஞ்சம் கேட்டால், சட்டப்படியாக அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வது எப்படி என்று தெரிந்து கொள்வோம்....

பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனை பணமே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.முன்பெல்லாம், லஞ்சம் வாங்குவோர், அரசுத்துறைகளில் அங்கொன்றும், இங்கொன்றுமாக குறைந்த எண்ணிக்கையில்தான் இருந்தனர். இவர்கள், நேர்மையான ஊழியர்களை கண்டு பயந்தனர். மக்களிடம் லஞ்சம் கேட்கவே கூச்சப்பட்டனர்; கைநீட்டி காசு வாங்க அச்சப்பட்டனர். இன்றோ, நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அரசுத்துறைகளில் லஞ்சம் வாங்குவோர் எண்ணிக்கை பெருகிவிட்டது. நேர்மையாக பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. லஞ்சம் வாங்குவோரை பார்த்து, லஞ்சம் வாங்காத ஊழியர்கள் அச்சப்படும் நிலையும் வந்துவிட்டது. இதற்குகாரணம், லஞ்சம் வாங்குவோரே, 'மெஜாரிட்டி'யாக உள்ளனர். 'லஞ்சம் வாங்குவது ஒன்றும் தப்பில்லை; அரசாங்க வேலை பெறவும், விரும்பிய இடத்துக்கு, 'டிரான்ஸ்பர்' பெறவும் பல லட்சங்களை செலவழிக்கிறோம். முதலீடு செய்த பணத்தை திரும்பப் பெற வேண்டாமா' ? என, லஞ்சம் வாங்குவதை, நியாயப்படுத்தவும் துணிந்துவிட்டனர்.

அரசுத்துறையில் பணியாற்றும் ஒரு அதிகாரி அல்லது ஊழியர் லஞ்சம் வாங்காமல் பணியாற்றினால், தற்போது அது, அதிசயத்துக்குரிய செய்தியாக வெளியாகிறது. இந்த அவலத்தை என்னவென்று சொல்வது? ஒருவர் லஞ்சம் வாங்காமல், நேர்மையாக பணியாற்றுவது என்பது, வாழ்வில் அவர் கடைபிடிக்க வேண்டிய அடிப்படை ஒழுக்க நெறி கோட்பாடுகளில் ஒன்று. ஆனால், அவ்வாறான ஒழுக்க நெறி கோட்பாட்டை ஒருவர் பின்பற்றுவதே ஆச்சரியத்துக்கும், பாராட்டுக்கும் உரியதாக மாறிவிட்டது. இது, நாம் சார்ந்திருக்கும் சமூகம் எப்படிப்பட்ட சீரழிவுப்பாதையில், பேராபத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. முன்பெல்லாம், சட்டத்தை மீறி காரியங்களை செய்ய மட்டுமே அதிகாரிகள், ஊழியர்கள் லஞ்சம் கேட்டார்கள்.

இப்போது, சட்டப்படியான ஒரு காரியத்தை செய்யக்கூட லஞ்சம் கேட்கிறார்கள்; அதுவும் மிரட்டிக் கேட்கிறார்கள். 'இந்த நடவடிக்கைக்கு, 'இன்ன ரேட்' என்று விலையையும் நிர்ணயம் செய்துவிட்டார்கள். 'கரன்சி'யை காட்டாதவர்களின் மனுக்கள், கசங்கிய காகிதமாக குப்பைக் கூடைக்கு போகின்றன.

நம் நாட்டில் லஞ்சமும்- ஊழலும் கக்கூஸ் முதல் சட்டமியற்றும் பார்லிமென்ட் வரை நாறடித்துக்கொண்டிருக்கிறது. எல்லா துறைகளிலும், கல்லாப்பெட்டிகள் நிரம்பி வழிகின்றன. லஞ்சம் கொடுப்போர் இருக்கும்வரை, வாங்குவோரும் இருக்கத்தான் செய்வர். வாங்குவது குற்றமெனில்; கொடுப்பதும் குற்றமே. அந்த குற்றத்தை இனி, செய்ய வேண்டாம். அரசு

அதிகாரிகள், ஊழியர்கள் லஞ்சம் கேட்டால், சட்டப்படியாக அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வது எப்படி? கேட்டால் ஆத்திரப்படாதீர்கள்..... அரசின் நலத்திட்ட உதவி பெற, உங்களுக்கு வருமானச் சான்று தேவைப்படுகிறது என, வைத்துக்கொள்வோம். வருவாய்த்துறை அலுவலகத்தில் முறைப்படி விண்ணப்பம் அளிக்கிறீர்கள். அங்குள்ள அதிகாரியோ, '2000 ரூபாய் லஞ்சம் கொடுத்தால்தான் சான்று வழங்குவேன்' என்கிறார். அவரிடம் கோபத்தை வெளிப்படுத்தாதீர்கள். 'பணத்துடன் வருகிறேன்' என, பவ்யமாக கூறிவிட்டு வெளியேறிவிடுங்கள். லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் எழுத்து பூர்வமான புகார் அளியுங்கள். புகாரை பெற்றதும், லஞ்ச ஒழிப்புத்துறையின், ஆரம்பகட்ட விசாரணை இரு விதமாக நடக்கும். புகார்தாரரின் கூற்றில் உண்மை உள்ளதா ? லஞ்சம் கேட்ட அதிகாரி எப்படிப்பட்டவர் ? அதிகாரி மீது லஞ்ச புகார் அளிப்பவர், நேர்மையானவராக இருக்க வேண்டும். மனுதாரரின் கோரிக்கை (வருமானச் சான்று கோரி, வருவாய்த்துறை அலுவலகத்தில் சமர்ப்பித்த விவரங்கள்) சட்டப்படி நியாயமானதாக இருக்க வேண்டும். இது குறித்துதான், லஞ்ச ஒழிப்புத்துறையினர் ஆரம்ப கட்ட விசாரணை மேற்கொள்வர்.

புகாரில் கூறிய விவரங்கள் உண்மை என்பதை உறுதிப்படுத்தியபின், லஞ்சம் கேட்ட அதிகாரி குறித்த விசாரணை ரகசியமாக நடக்கும். அவர் எப்படிப்பட்டவர், ஏற்கனவே புகார் உள்ளதா என, தகவல் திரட்டுவர். ஏனெனில், குற்றஞ்சாட்டப்படும் அதிகாரி, நேர்மையானவராகவும், கண்டிப்பானவராகவும் கூட இருக்கக்கூடும். அவரது பெயரைக்கூறி, புரோக்கர்கள் முறைகேட்டில் ஈடுபடவும் வாய்ப்புண்டு. எதிரிகள், பொய் புகார் அளித்து பழிவாங்கவும் கூடும். எனவே, ரகசிய விசாரணை நடத்தி, புகார் உண்மை என்பதை உறுதி செய்த பிறகே, அடுத்தகட்ட கைது நடவடிக்கையை லஞ்ச ஒழிப்புத் துறை மேற்கொள்ளும். மன உறுதி பரிசோதிப்பு.. புகார்தாரர் மனுவில் கூறப்பட்டுள்ள விவரங்கள் உண்மை' என, உறுதி செய்யப்பட்டதும், அவரது மன உறுதி பரிசோதிக்கப்படும். புகார்தாரர் தாமாக புகார் அளிக்க வந்துள்ளாரா? வேறு யாரேனும் தூண்டிவிட்டதன் காரணமாக புகார் அளிக்க வந்துள்ளாரா? லஞ்சம் கேட்ட அதிகாரியை கைது செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளாரா? என, பரிசோதிப்பர்.

ஏனெனில், லஞ்சம் கேட்ட அதிகாரியை, 'பொறி' வைத்து கைது செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள மனுதாரரின் மன உறுதி மிக முக்கியமானது. காரணம், வழக்குப்பதிவு செய்து, லஞ்ச அதிகாரியை கைது செய்வதற்கான நடவடிக்கையை துவக்கியபின், பாதிக்கட்டத்தில், புகார்தாரர் ஒத்துழைக்காமல் அச்சமடைந்து ஓடிவிடுவதும் உண்டு. இவ்வாறு பின்வாங்கிவிட்டால், லஞ்சம் கேட்ட அதிகாரியை கைது செய்வதற்கான நடவடிக்கை தோற்றுவிடும். கைது நடவடிக்கையை துவக்கிய போலீஸ் அதிகாரி, துறைசார்ந்த நெருக்கடிக்கு உள்ளாக நேரிடும். எனவே, புகார்தாரர் மனஉறுதியுடன் சட்ட ரீதியான நடவடிக்கைக்கு ஒத்துழைக்க ஆலோசனைகள் வழங்கப்படும். அதன் பிறகே, லஞ்ச பேர்வழியை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் துவங்கும்.

**ஒத்திகை கைது....அரசு தரப்பு சாட்சிகள் அழைப்பு**: லஞ்சம் கேட்ட அரசு ஊழியரைக் கைது செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ளும்போது, அரசு தரப்பு சாட்சிகள் இருவர் கட்டாயம் இருக்க வேண்டும், என்கிறது சட்டம். அதனால், அரசு தரப்பு சாட்சிகள் இருவர் தயார் செய்யப்படுவர். லஞ்ச வழக்கில் கைது செய்யப்படவுள்ள அதிகாரி எந்த பதவியில், என்ன பணி நிலையில் உள்ளாரோ, அதற்கு நிகரான பதவியில் இருக்கும் அதிகாரிகள் இருவர், அரசு தரப்பு சாட்சிகளாக அழைக்கப்படுவர். உதாரணமாக, 'குரூப் -1' பதவி நிலை அதிகாரியை கைது செய்யும் திட்டமிட்டிருந்தால், அதே பதவி நிலையில் இருக்கும் அதிகாரிகள் இருவரை, வேறு துறைகளில் இருந்து அழைப்பர்.கைது செய்யப்படப் போகும் நபர் சாதாரண ஊழியராக இருப்பின், அதற்கு நிகரான பணி நிலையில் இருக்கும் ஊழியரை அழைப்பர்.

அரசு தரப்பு சாட்சிகளாக செயல்படுமாறு, இவர்களை நேரடியாக தொடர்பு கொண்டு, லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் அழைக்க மாட்டார்கள். அழைக்கப்படும் சாட்சிகள், எந்த துறையில் பணியாற்றுகிறார்களோ, அந்த துறையின் தலைமை பொறுப்பில் உள்ள அதிகாரிக்கு கடிதம் அளிப்பர். அவர்தான், சாட்சியை தேர்வு செய்து அனுப்பி வைப்பார். இரு சாட்சிகள், வெவ்வேறு துறையை சார்ந்தவர்களாகவும் இருக்கக்கூடும். இங்கே ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். எந்த துறையில் பணியாற்றும் அதிகாரியை, லஞ்ச வழக்கில் கைது செய்ய திட்டமிட்டிருக்கிறார்களோ, அந்த துறையில் இருந்து, அரசு தரப்பு சாட்சிகளை அழைக்கமாட்டார்கள். அவ்வாறு அழைத்தால், கைது நடவடிக்கை திட்டம் கசிந்து தோல்வியடைந்துவிடும் வாய்ப்புள்ளது.

**ஒத்திகை:** லஞ்ச ஒழிப்பு அலுவலகத்துக்கு வருகை தரும் இரு அரசு தரப்பு சாட்சிகளிடம், புகார்தாரரை லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் அறிமுகம் செய்து வைப்பர். அப்போதுதான், எந்த துறையில் பணியாற்றும் அதிகாரியை கைது செய்ய, தாம் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதே, அந்த சாட்சிகளுக்கு தெரியும். அதன்பின், லஞ்ச அதிகாரியை கைது செய்வது தொடர்பான ஒத்திகை, லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் நடத்தப்படும். லஞ்ச அதிகாரியை கைது செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ளும்போது,

புகார்தாரரும், அரசு தரப்பு சாட்சிகளும் எவ்வாறு ஒத்துழைக்க வேண்டும் என, காட்சி அமைப்புடன் கூடிய செயல் விளக்கம் அளிக்கப்படும். லஞ்ச ஒழிப்பு போலீசாரில் ஒருவர், லஞ்சம் கேட்ட அதிகாரியாக நடிப்பார். அரசு தரப்பு சாட்சிகள் தயார் நிலையில் இருப்பர். கைது செய்யப்போகும், போலீஸ் அதிகாரிகளும் இந்த ஒத்திகையில் நடிப்பர். ஒத்திகை வெற்றிகரமாக முடிந்ததும், அடுத்ததாக, உண்மையான கைது நடவடிக்கைகள் துவங்கும். லஞ்ச பணம் தயாராகும்:.... அதிகாரிக்கு தரப்பட வேண்டிய லஞ்சப்பணம் தயாராகும். இத்தொகையை, புகார்தாரரே கொண்டுவர வேண்டும். ரூபாய் நோட்டுகளில் இடம்பெற்றிருக்கும் 'சீரியல் எண்கள்' குறிப்பெடுக்கப்படும். அதன்பின், அவற்றின் மீது பினாப்தலின் எனும் ரசாயனம் தடவப்படும். பின்னர் நேரம் குறிக்கப்படும்:...

. புகார்தாரர், தன்னிடம் லஞ்சம் கேட்ட அதிகாரியைத் தொடர்பு கொண்டு, 'நான் உங்களை சந்திக்க எப்போது வரலாம்' என, கேட்டு, நேரம் குறிப்பார். லஞ்ச பணத்தை வாங்கி பையில் போடும் ஆவலில், அந்த அதிகாரியும் ஓர் நேரத்தை சொல்வார். ஆம், அந்த நேரமே, அவர் அந்த அலுவலகத்தில் கடைசியாக பணியாற்றப்போகும், கைதாகப்போகும் நேரம் என்பதை அவர் அறிந்திருக்க மாட்டார். காசு தான் கண்களை மறைக்கிறதே...!? இப்போது, புகார்தாரர், அதிகாரியை சந்திக்கப்போவது உறுதியாகிவிட்டது. லஞ்ச ஒழிப்பு போலீசார், ரசாயன பவுடர் தடவிய ரூபாய் நோட்டுகளை, புகார்தாரரின் சட்டை பாக்கெட்டில் வைத்து அனுப்பி வைப்பர். சாட்சி உடன் செல்வார். அரசு தரப்பு சாட்சிகளில் ஒருவர், புகார்தாரருடன் செல்வார். மற்றொரு சாட்சி, லஞ்ச ஒழிப்பு போலீசாருடன் செல்வார். லஞ்ச பணத்தை எடுத்துச் செல்லும் புகார்தாரர், தப்பித்தவறிக்கூட ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை தொடமாட்டார்; தொடவும் கூடாது.குறிப்பிட்ட அரசு அலுவலகத்துக்குச் சென்று, தன்னிடமுள்ள லஞ்சப் பணத்தை அதிகாரியிடம் அளிப்பார்.ஒருவேளை அந்த அதிகாரி உஷாராக இருந்து, 'உங்களுடன் வந்திருப்பது யார்' எனக் கேட்டால், 'இவரா சார், என் சித்தப்பா, மாமா...' என, ஏதாவது ஒரு உறவுமுறையை கூறி நம்ப வைப்பார். கைமாறியதும் சிக்னல்:

புகார்தாரர் அதிகாரிக்கு லஞ்சம் கொடுப்பதை, உடன் வந்த அரசு தரப்பு சாட்சி நேரில் காண்பார். அதன்பின் இருவரும் வெளியே வருவர். தனக்கு ஏற்கனவே அறிவுறுத்தியபடி, புகார்தாரர் வெளியே வந்ததும், சாதாரண உடையில், சாமானியரைப் போன்று சற்று தொலைவில் மறைந்து நின்றிருக்கும் லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு 'சிக்னல்' தருவார்.(தலைமுடியை மூன்று முறை தன்னிடம் உள்ள சீப்பால் வாருவார் அல்லது கைக்குட்டையை பாக்கெட்டில் இருந்து எடுத்து முகத்தை துடைப்பார் அல்லது, தனக்கு அளிக்கப்பட்ட வேறு ஏதாவது சமிக்ஞையை காண்பிப்பார்).

**அதிரடியாக கைது:...**'இதற்காகத்தானே இத்தனை நாட்களாய் காத்திருந்தோம்' என்பதைப் போன்று, அவர்கள் அதிரடியாக உள்ளே புகுந்து லஞ்ச அதிகாரியை கைது செய்வர்.

**விஜிலன்ஸ் கமிஷனர் மற்றும் DVAC- முகவரிகள்** பொதுமக்கள் பயன் பாட்டுக்காக கொடுக்கப்பட்டுள்ளது.

**1) Vigilance Commissioner**

Personnel and Administrative Reforms Department Secretariat, Chennai 600 009
PBX No. 044-25665566
Email: parsec@tn.gov.in

**(2)The Director,**

Vigilance and Anti-Corruption,
293,MKN Road, Collectors Nagar, Alandur,Chennai,Tamil Nadu-600016.
Chennai – 600 028.
Phone-044-22321090/22321085/22310989/ 22342142
E-mail: dvac@nic.in

**CHENNAI ZONE**
Joint Director and Head of Zone,
III Floor, E.V.K., Sampath Building, College Road, Chennai 600006.
044-28232756(Direct),
044-28272358(General),
044-28232755 (FAX) 09444446240

## ‘டாஸ்மாக் பணம்’ அரசு கஜானாவுக்கு ‘அரோகரா’

**April 1, 2023(ARAMOnline)**

**டாஸ்மாக் மூலமாக அரசுக்கு கிடைத்து வருவது முழுமையான தொகையல்ல! உண்மையில் அரசு கஜானவிற்கு வர வேண்டிய சில ஆயிரம் கோடிகள் ஆட்சியாளர்கள் மற்றும் அதிகார மையத்தால் அபகரிக்கப்படுகிறது! நிதி அமைச்சர் பி.டி.ஆரே, ”டாஸ்மாக் பணம் அரசுக்கு முழுமையாக கிடைப்பதாக சொல்ல முடியாது” என்றதன் பின்னணி என்ன?**

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மார்ச் 27, 2023 அன்று அதிமுக சட்டமன்ற உறுப்பினர் பி.தங்கமணி டாஸ்மாக் வருமானம் முழுமையாக அரசுக்கு வருகிறதா என்ற கேள்விக்கு பதிலளித்த நிதித்துறை அமைச்சர் பி.டி.பழனிவேல் தியாகராஜன், ”முழுமையாக வருகிறதா..? என்று கேட்டால் என்னால் சொல்ல முடியவில்லை. ஏனென்றால், கம்யூட்டர் சிஸ்டம் இல்லை, எல்லா கடைகளுக்கும் கம்யூட்டர் இருந்திருந்தால் – உற்பத்திக்கும், விற்பனைக்கு இடையே ஒரு பாட்டில் காணாமல் போகாத அளவுக்கு கம்யூட்டர் சிஸ்டம் இருந்திருந்தால் – என்னால் பதில் சொல்ல முடியும்” என்று கூறியுள்ளார்.

ஏன் நவீன மல்டி கம்யூட்டர் சிஸ்டம் மூலம் அனைத்து டாஸ்மாக் கடைகளையும் கணினிமயப்படுத்தி கேஷ் கவுண்டர் – சேல்ஸ் கவுண்டர் என நிர்வாகத்தை முறைப்படுத்தி அனைத்து வாடிக்கையாளருக்கும் பார் கோடிங் பில்லிங் முறை நடைமுறைப்படுத்த தமிழக அரசு விரும்புவதில்லை? என்பதற்கான பதிலில் தான் வில்லங்கமே ஒளிந்துள்ளது. உண்மையில் சி.ஐ.டி.யூ உள்ளிட்ட தொழிற்சங்கங்களும் கேளராவை போல கம்யூட்டர் சிஸ்டம் வேண்டுமென தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றன. ஆனால், அதை பற்றிக் கொஞ்சமும் அக்கறை காட்டுவதில்லை தமிழக ஆட்சியாளர்கள்.

நாளொன்றுக்கு சில லட்சங்கள் விற்பனையாகும் நிறுவனங்கள் கூட கணினிமயப்படுத்திய வியாபாரத்தை நடைமுறைப்படுத்தும் போது, தற்போது நாளொன்றுக்கு சுமார் 120 கோடி முதல் 150 கோடி வரை பணபரிவர்த்தனை நடக்கும் மிக பெரிய நிறுவனமான டாஸ்மாக்கில் கணினிமயப்படுத்துவதற்கு என்ன தயக்கம்?

இத்தனைக்கும் மத்திய தணிக்கைக்குழு அறிக்கையில் டாஸ்மாக் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பம் குறித்தான குறிப்பில், ’தமிழ்நாடு அரசின் டாஸ்மாக் மதுபாட்டில்கள் மற்றும் வெளிப்புற அட்டைப் பெட்டிகள் மீது பார் குறியீட்டு முறையை அறிமுகப்படுத்த வேண்டும்’ எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால், அமல்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மது உற்பத்தி ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு டாஸ்மாக் கிடங்குக்கு வருகிறது. பிறகு கிடங்குகளிலிருந்து டாஸ்மாக் கடைகளுக்கு வருகிறது. இந்த சரக்கு மேலாண்மையை எளிதாக்க வேண்டும் என்றால், கடைகளில் பில்லிங் செய்யணும்! விற்பனை மற்றும் சரக்கு இறுப்பு ஆகியவை குறித்த சரியான கணக்கை முறைப்படுத்தி வெளிப்படையாக பராமரிக்க கணினிமயப்படுத்துதல் மிகப் பயனுள்ளதாக இருக்கும். ஆனால், இதைச் செய்ய திமுக, அதிமுக என இரண்டு ஆட்சியிலுமே ஆர்வம் காட்டுவதில்லை.

காரணம், கணினிமயப்படுத்திவிட்டால், ‘கோல்மால்’ செய்ய முடியாது! இப்ப பில் போடாம ’அன்அபிசியல் சேல்ஸ்’ செய்து, அந்த வருமானம் உயர்மட்டத்தில் பல தரப்பிலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ”சரியாக சொல்ல வேண்டும் என்றால், பெரும்பாலான பார்களுக்கு விநியோகம் செய்யப்படும் சரக்குகளுக்கு பில்லே தருவதில்லை. 100 ரூபாய்க்கான சரக்கு விற்பனையில் 83 ரூபாய் அரசுக்கு வரியாக தர வேண்டும். பில் இல்லாமல் சரக்கை தந்து விற்கச் சொல்வதால், அந்த 83 ரூபாய் அரசுக்கு போகாது. இந்த வகையில் ஒவ்வொரு நாளுமே சில கோடிகள் வரி ஏய்ப்பால் ஆதாயம் அடைகின்றனர் ஆட்சியாளர்களும், அதிகாரிகளும்” என்கிறார்கள் ஊழியர்கள்!

இந்தக் காரணத்திற்காகத் தான் டாஸ்மாக் நிர்வாகம் பார் கோடிங் முறைக்கு மாறாக, எலட்ரானிக் பில்லிங் முறையை நடைமுறைப்படுத்தி வருகிறது. அதுவும் கூட 2,500 கருவிகள் மட்டுமே வாங்கப்பட்டு அதுவும் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. ஆக, டாஸ்மாக் நிறுவனத்தில் மது விற்பனையை நவீனப்படுத்துவதற்கு எந்த கழக அரசும் முனைப்பு காட்டப்படவில்லை என்பதே உண்மை.

ஆனால், இந்த உண்மைகளை மறைத்து அமைச்சர் செந்தில்பாலாஜி டாஸ்மாக் கடைகளில் அதிகமாக விலையில் விற்பனை செய்பவர்கள் 1,952 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ. 5 கோடி அளவிற்கு அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். 'அடடா, உத்தமரான செந்தில் பாலாஜி உரிய விலைக்கு மேலாக விற்கும் ஊழியர்கள் மீது நடவடிக்கையை பாய்ச்சி உள்ளாராம்! அதில், அபராதம் 5 கோடி வசூல் ஆகியுள்ளதாம்' சபாஷ்!

நம்ம கேள்வி என்னவென்றால், தமிழகத்தின் அனைத்து டாஸ்மாக்கிலும் விதிவிலக்கின்றி அதிக விலைக்கு தான் விற்கபப்டுகிறது எனும் போது, ஏன் 1,952 பேர் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதே! அப்படின்னா, இந்த நடவடிக்கைக்கு பிறகு தற்போது நியாய விலையில் விற்பனையாகிறதா? என்றால், அவரிடம் பதில் இருக்காது. "ஏன் சரக்குகள் கூடுதல் விலைக்கு அனைத்து டாஸ்மாக் கடைகளிலும் தினசரி விற்கிறீர்கள்?'' என ஊழியர்களிடம் கேட்டால், "டாஸ்மாக்கில் தலைமை அலுவலக பறக்கும்படை, மண்டல பறக்கும் படை எல்லாம் உள்ளன! இவை எல்லாம் கையூட்டு வாங்கும் படைகளன்றி, தவறுகளை தட்டிக் கேட்கும் படைகள் அல்ல! உண்மையில் தமிழக டாஸ்மாக்கின் தலைமை அலுவலகத்திற்கு அருகில் உள்ள கடைகளில் கூட நிர்ணயிக்கப்பட்ட விலையில் மதுபானங்கள் நியாயமான விலைக்கு யாரும் வாங்கிவிட முடியாது என்பதே யாதார்த்தம்." என்றனர்.

இது பற்றி நாம் மேலும் விசாரித்ததில், "கூடுதல் விலை வைத்து விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு தாங்கள் தள்ளப்பட்டு உள்ளோம் என ஊழியர்கள் சிலர் தெரிவித்தனர். "எங்கள் பணிக்கேற்ப நியாயமான, சட்டப்படியான ஊதியம் வழங்கப்படுவதில்லை. டாஸ்மாக்கில் எந்தவொரு தவறு செய்தாலும், தவறுக்கேற்ப கொடுக்க வேண்டியதை மேலிடத்திற்கு கொடுத்துவிட்டால் தண்டனை கிடையாது. ஆகவே, "தவறு செய்து 'சம்திங்கை' எங்களுக்கு தள்ளிவிடுங்கள்" என அதிகாரிகள் தான் எங்களை ஊக்கப்படுத்துகிறார்கள்! அப்படி கூடுதல் விலைக்கு விற்பனையாகும் பணம் மாவட்ட மேலாளர், மண்டல மேலாளர், பறக்கும்படை அலுவலர், உள்ளூர் காவல்துறை, **கரூர் கம்பெனி** என்ற பெயரில் திமுக கட்சிக்காரர்கள் என பல நிலைகளில் மாமூலாக தரப்படுகிறது. இதை எழுதப்படாத விதியாகவே தற்போது நிலை நாட்டிவிட்டனர்.

குறிப்பிட்ட தேதியில் மாமூல் சேரவில்லையென்றால் அந்த கடை ஊழியர்கள் மீது நடவடிக்கை பாயும். இதற்கு மேல் கடையில் பாட்டில்கள் உடைந்து விடுவது, சரக்கு வண்டியில் திருடு போவது, சரக்கு இறக்குக் கூலி, மின்சார கட்டணத்தில் ஒரு பகுதி, கடை வாடகையில் ஒரு பகுதி, காலி அட்டை பெட்டி விற்பனையில் ஏற்படும் குறைவு என பலவிதமான ஏற்பாடுகள் இந்த கூடுதல் விலை விற்பனையில் உள்ளது என்பது அமைச்சருக்கே தெரியுமே'' என்றனர். இது குறித்து சி.ஐ.டியு டாஸ்மாக் ஊழியர் சங்கத்தின் **திருச் செல்வம்** அவர்களிடம் பேசிய போது, 'பிச்சை எடுத்தானாம் பெருமாளு, அதை புடுங்கி தின்னானாம் அனுமாரு' என்ற பழமொழி டாஸ்மாக்கிற்கு பொருந்தும். ஒரு அனுமாரு இல்ல... பல ரூபத்துல அனுமாருகள் ஊழியர்களிடம் பிடிங்கி தின்னு வருவதை அமைச்சர் செந்தில் பாலாஜி அறியாததல்ல !

**கடந்த ஆறுமாத காலமாக டாஸ்மாக் கடைகளில் விற்பனையாகும் பாட்டில்கள் அடிப்படையிலும், விற்பனை அடிப்படையிலும் செந்தில் பாலாஜியின் ஆட்கள் கரூர் கம்பெனி என்ற பெயரில் தினசரி மாமூல் வசூலிக்கும் அட்டூழியத்தை நாங்கள் டிஜி.பி தொடங்கி முதல்வர் வரை புகார் தந்துவிட்டோம். ஆனால், எந்த அசைவுமில்லை. அமைச்சருக்கு நேரம் எப்போது கிடைக்கும் என்று சொன்னால் சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் டாஸ்மாக் செயல்பாடுகள் குறித்து வெளிப்படையான விவாததிற்கு தொழிற்சங்கங்கள் தயார். அமைச்சர் தயாரா? என்பதை தெரிவிக்க வேண்டும்'' என்றார்.**

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (G) யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது.
பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .
**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

# பொதுத் துறை வங்கிகளை பலிகடா ஆக்குவதா..?

***-சாவித்திரி கண்ணன் (அறம் ஆன்லைன்)***

March 26, 2023

தற்போது நமது நாட்டில் பொதுத் துறை வங்கிகள், தனியார் வங்கிகள் இரண்டும் உள்ளன! எந்த வங்கியில் தங்கள் பணத்தை போட்டு வைத்தால் பாதுகாப்பு என மக்கள் நினைக்கிறார்களோ.., அதில் போடுவதற்கான ஒரு வாய்ப்பை இல்லாமலாக்கி, 'தனியார் வங்கிகள் ஒன்றே சாய்ஸ்' என பாஜக அரசு பொதுத் துறை வங்கிகளை அழிப்பது சரியா..? இது நாள் வரை சாதாரண பொது மக்களுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை, பாங்கிலே நம்ம பணத்தை போட்டு வைத்தா பாதுகாப்பாக இருக்கும் என்பது தான்! அந்த ஒற்றை நம்பிக்கையையும் அழித்தொழிக்கும் வண்ணம் அரசு வங்கிகள் அனைத்தையுமே தனியார் மயமாக்குவது என்ற பாஜக அரசின் நோக்கம் மிக ஆபத்தானது.

வங்கிகளில் அரசு வைத்திருக்கும் பங்கின் சந்தை மதிப்பு சுமார் ரூ.4,80,207 கோடி. இந்த வங்கிகளைத் தனியார்மயமாக்கினால் இதற்கு என்ன பாதுகாப்பு? மக்கள் வைத்திருக்கும் பணமோ இதைவிட பல மடங்காகும். ரிசர்வ் வங்கியின் உரிம விதிமுறைகளின்படி தொழில்துறை நிறுவனங்கள் வங்கிகளை நடத்த அனுமதியில்லை. ஆனால், பாஜக அரசோ வங்கிகளிடம் கடன் வாங்கி ஏமாற்றிய தொழில் துறை நிறுவனங்களிடமே தற்போதுள்ள அரசு வங்கிகளை தாரை வார்க்கத் துடிக்கிறதே..? தெரிந்தே பாழுங் கிணற்றில் மக்களை தள்ளிவிடுவதா..?

தற்போது உள்ள தனியார் வங்கிகளுக்கோ அல்லது வங்கி சாராத நிதி நிறுவனங்களுக்கோ தனியார் வங்கி ஆரம்பிக்கும் தகுதி கிடையாது. காரணம், வங்கிகளில் முதலீடு செய்யும் அளவு நிதி வசதி இவர்களிடம் கிடையாது. அப்படியிருக்க, ஏற்கனவே வாங்கிய கடனை திருப்பி செலுத்தாமல் வங்கி மோசடி செய்தவனிடம், இருக்கிற பணத்தையும் சேர்த்து எடுத்துக்கோ ராஜா என்று தூக்கி கொடுப்பது அயோக்கியத்தனமின்றி வேறல்ல, அரசுத் துறை வங்கிகளை அழித்தொழித்தல் என்பதை ஒரு வேள்வியாகச் செய்து கொண்டிருக்கிறது பாஜக அரசு!







1 935இல் தான் இந்திய ரிசர்வ் வங்கி உருவானது. 1947 காலகட்டம் வரை 900 தனியார் வங்கிகள் திவாலாகியுள்ளன. சுதந்திரத்திற்கு பிறகான 1947 முதல் 1969 வரை 665 தனியார் வங்கிகள் நஷ்டடைந்து கடையை மூடின!. இந்த அனைத்து வங்கிகளிலும் டெபாசிட் செய்த மக்கள், தங்கள் பணத்தை இழந்துள்ளனர்.

1969 இல் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட பிறகும், 36 தனியார் வங்கிகள் திவால் நிலைக்கு சென்றன. ஆனால், இவை மற்ற அரசு வங்கிகளுடன் இணைப்பதன் மூலம் மீட்கப்பட்டன. பாங்க் ஆப் தஞ்சாவூர் இந்தியன் வங்கியுடன் இணைக்கப்பட்டது. பாங்க் ஆப் தமிழ்நாடு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் இணைக்கப்பட்டது. இந்த வரிசையில் கொச்சின் வங்கி, குளோபல் டிரஸ்ட் பேங்க் லிமிடெட் போன்ற பல முக்கிய வங்கிகளும் உண்டு! ஆக, தனியார் வங்கிகள் பாதுகாப்பற்றவை என்பது மீண்டும், மீண்டும் நம் அனுபவத்தில் பெற்ற உண்மை மட்டுமல்ல, அப்படி தனியார் வங்கிகள் திவாலாகும் போது அரசு வங்கிகளே தாங்கி பிடித்து அதன் வாடிக்கையாளர்களை காப்பாற்றி உள்ளன! சமீபத்தில் கூட யெஸ் வங்கி திவாலான போது ஸ்டேட் பாங்க் தான் உதவிக்கு வந்தது. இந்தச் சூழலில், அனைத்து அரசு

வங்கிகளையும் இல்லாமல் செய்துவிட்டால், பாதிக்கபடும் மக்களை காப்பாற்றக் கூட வாய்ப்பற்ற நிலைமை தான் ஏற்படும்.

தனியார் வங்கிகள் திவாலானால் அவற்றில் மக்களின் சேமிப்பு அதிகபட்சமாக ஒருவருக்கு ஐந்து லட்சம் ரூபாய் வரை மட்டுமே கிடைக்கும். அரசு வங்கிகளில் மக்களின் வைப்புத்தொகை முழுமையாக பாதுகாக்கப்படும். 1969-ல் 14 பெரிய வங்கிகள் அரசுடமை ஆக்கப்பட்டன! அப்போது வெறும் 8,187 கிளைகள் தாம் இருந்தன. ஆனால், தற்போதோ சுமார் 1,61,000 கிளைகளாக பெருகியுள்ளன! மக்களிடம் சேமிக்கும் பழக்கமும் வளர்ந்துள்ளது.

1990 களில் 10 புதிய தனியார் வங்கிகள், 2000 களில் 2 புதிய தனியார் வங்கிகள், 2014 இல் பாஜக ஆட்சிக்கு வந்தது தொடங்கி மளமளவென்று 22 புதிய தனியார் வங்கிகள் வந்துள்ளன. இந்த வங்கிகளில் வட்டியும் அதிகம். சாதாரண மக்கள் கடன் பெறுவதும் அரிது. சரி, தற்போது தனியார் வங்கியும் உள்ளன! பொதுத் துறை வங்கிகளும் உள்ளன! மத்திய அரசாங்கத்தின் அனைத்து திட்டங்களையும் பொதுத்துறை வங்கிகள் மட்டும் தானே நிறைவேற்றுகின்றன. ஜன்தன் கணக்கு, விபத்து காப்பீடு, ஆயுள் காப்பீடு – இவற்றை எல்லாம் தனியார் வங்கிகள் சீண்டுவதே இல்லையே! இத்தனை சேவை செய்யும் பொதுத்துறை வங்கிகளை சாவை நோக்கி நகர்த்துவது ஒரு நல்ல அரசாங்கம் செய்யக் கூடிய காரியமா? என்று தான் நாம் கேட்கிறோம்.

இந்த பாஜக அரசு பதவி ஏற்றது தொடங்கி 28 பொதுத் துறை வங்கிகளை ‘இணைப்பு’ (merger) என்ற பெயரில் 12 ஆக குறைத்தது. தற்போது அதையும் ஐந்தாகக் குறைக்க திட்டங்கள் வேகம் பெற்றுள்ளன! அதாவது வளர்ச்சி பாதையில், சேவை வழியில் உள்ள வங்கிகளை அழிவை நோக்கி அழைத்துச் செல்கிறது பாஜக அரசு! அமெரிக்காவிலேயே தனியார் வங்கிகள் தடுமாறுகின்றன. இழுத்து மூடப்படுகின்றன! அப்படி இருக்க, ‘திருடனிடம் சாவியைக் கொடுப்பேன்’, ‘எரியிற கொள்ளியைக் கொண்டு தான் தலையை சொறிவேன்’ என அடங்கா திமிருடன் நாட்டை அழித்து வருகிறது பாஜக அரசு!

அதன் வெளிப்பாடாகத் தான் தற்போது பொதுத் துறை வங்கிகளில் காலி பணியிடங்களை நிரப்பாமல் அழிச்சாட்டியம் செய்து வருகிறது பாஜக அரசு. இதனால், வாடிக்கையாளர்களுக்கு இது நாள் வரை நல்ல சேவை செய்து வந்த பொதுத் துறை வங்கிகள் முழுச் சேவையையும் தர இயலாமல் திணறுகின்றன. இதன் மூலம் பொதுத் துறை வங்கிகளின் மீது அதிருப்தியையும், தனியார் வங்கிகளை நோக்கி மக்களை நகர்த்துவதையும் சாமார்த்தியமாகச் செய்கிறது பகல் கொள்ளை பாஜக அரசு!

**‘இணைப்பு’ என்ற பெயரில் வங்கிகளை ஒன்றோடு ஒன்று சேர்த்து நசுக்கி அழிக்காதே!**

பொதுத் துறை வங்களிடம் இருக்கும் குறைபாடுகளை தவிர்க்க முடியும். சீர்படுத்த முடியும். தற்போது வாராக் கடன்கள் பொதுத் துறை வங்கிகளீல் அதிகரித்தற்கு காரணமே அதில் அரசியல் தலையீடுகள் தாம்! தவறான நபர்களுக்கு கடன் தர நேர்ந்த நிர்பந்தத்தின் மூலத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். பொதுத் துறை வங்கிகளில் இருக்கும் நேர்மையற்ற அதிகாரிகளையும், வேலை செய்யாமல் உள்ளேயே அரசியல் லாபி செய்யும் ஊழியர்கள் ஒரு சிலரையும் களை எடுக்க வேண்டும். சின்சியராக, நேர்மையாக பணியாற்றுபவர்களை மதித்து ஊக்கபடுத்த வேண்டும்.

**Also** சாதாரண ஏழை,எளிய மற்றும் நடுத்தர மக்களின் விருப்பம் அரசின் பொதுத் துறை வங்கிகள் தாம்! தனியார் வங்கியா? பொதுத் துறை வங்கியா? என மக்களிடம் கருத்து கணிப்பு வேண்டுமானால் நடத்திப் பாருங்கள், உங்களுக்கு துணிவிருந்தால்! பெரும்பாலான மக்களின் விருப்பத்திற்கும், நலனுக்கும் எதிரான, ‘வங்கிகள் அனைத்தும் தனியார் மயம்’ என்ற முடிவை பாஜக அரசு கைவிட வேண்டும். கட்சிப் பாகுபாடின்றி இதில் அனைவரும் பொது நலன் சார்ந்து ஒன்று சேர வேண்டும்.

தனியார் வங்கிகள் இருந்துவிட்டு போகட்டும். அரசு வங்கிகளும் அப்படியே தொடரட்டும். தங்கள் பணத்தை முதலீடு செய்வது எங்கே என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும். நம் பணத்தை எடுத்து தனியாரிடம் தாரை வார்க்கத் துடிக்கும் தைரியம் இவர்களுக்கு எப்படி வந்தது? இருக்கிற பொதுத் துறை வங்கிகளை பொசுக்க துடிக்கும் பாஜக அரசின் ஆணவப் போக்கை நசுக்கி முறியடிக்க, ஒன்று திரண்டு போராடுவோம்.

# சட்டத்தின் பார்வையில்

***ஒவ்வொரு இந்திய குடிமகனும் தெரிந்து கொள்ள வேண்டிய சில அடிப்படையான சட்டங்கள்!***

இந்தியா ஒரு வித்தியாசமான நாடு. இங்கு அனைத்துமே அரசியலமைப்புச் சட்டத்தால் தீர்மானிக்கப்பட்டது. இந்த நாட்டில் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் இணையில்லாத மற்றும் யாராலும் தடுக்க முடியாத சில உரிமைகள் சட்டத்தின் வாயிலாக அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பிரச்சனை என்னவென்றால் யாரும் சட்டம் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டுவதில்லை, சட்டம் தெரிந்தவர்கள் தேவையான இடங்களில் சட்டம் பேசுவதும் இல்லை என்பது தான். அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டிய சில அடிப்படையான சட்ட உரிமைகளை இந்த பதிவில் காணலாம்.

1. இந்தியாவில் எந்த உணவகத்திலும், வணிக நிறுவனத்திலும் குடிநீரை பயன்படுத்துவதற்கும், கழிவறையை பயன்படுத்துவதற்கும் தனியே கட்டணம் வசூலிப்பது இந்திய சராய்ஸ் சட்டப்பிரிவு (Indian Sarais Act, 1887) படி சட்டவிரோதமாக கருதப்படுகிறது. இந்தியாவில் யார் வேண்டுமானாலும், எந்த நட்சத்திர விடுதியிலும், வணிக வளாகத்திலும் எந்த நேரத்திலும் குடிநீர் மற்றும் கழிவறை வசதியை முழுவதும் இலவசமாக பயன்படுத்திக்கொள்ளலாம். இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், தண்ணீர் மற்றும் கழிவறை வசதியை பெறுவோர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வாடிக்கையாளராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இந்த சட்டத்தை மீறும் வணிகநிறுவனங்கள் உணவங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

2. இந்தியாவில் எந்த உணவகத்திலும், வணிக நிறுவனத்திலும் பில் கட்டணத்தின் போது "சர்வீஸ் சார்ஜ்" என்ற பெயரிலோ, "வளர்ச்சிக்கட்டணம்" என்ற பெயரிலோ கூடுதல் கட்டணம் செலுத்த வாடிக்கையாளர்களை வற்புறுத்துவது சட்டவிரோதமாக கருதப்படுகிறது. மறைமுகமாகவோ, நேரடியாகவோ வாடிக்கையாளர்களிடம் இது போன்ற கட்டணம் வசூலிப்பது நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 1986 படி தண்டனைக்குரிய சட்டவிரோத செயலாக கருதப்படுகிறது. அவ்வாறு கூடுதல் கட்டணம் வசூலித்தால் நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்கு உரிமை உண்டு.

3. **குற்றவியல் நடைமுறைச் சட்டம், பகுதி (46 Criminal Procedure Code, Section 46)** படி, சூரிய உதயத்திற்கு முன்னரோ அல்லது சூரிய அஸ்தமனத்திற்கு பின்னரோ (காலை 6 மணிக்கு முன், மாலை 6 மணிக்கு பின்) குற்றம் ஏதும் சாட்டப்பட்ட ஒரு பெண்ணை கைது செய்ய முடியாது. அதே போல் குற்றம் சாட்டப்பட்ட பெண் மாலை ஆறு மணிக்கு மேல் போலீஸ் நிலையத்திற்கு வர மறுப்பதற்கு அனுமதி உள்ளது. மேலும் ஒரு பெண்ணை கைது செய்ய வேண்டுமென்றால் பெண் காவலர்கள் மட்டுமே கைது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். கொலை குற்றம் போன்ற கடுமையான குற்றங்களில் சம்பந்தப்பட்டவரை நீதிபதியின் அனுமதி பெற்ற பின்னரே பெண் காவலர்கள் இல்லாமலே ஆண் காவலர்களே கைது செய்ய முடியும்.

4. இந்திய தண்டனைச் சட்டம் 166A படி, எந்தவொரு போலீஸ் அதிகாரியும் குற்றம் தொடர்பான முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்ய மறுக்க முடியாது. அவ்வாறு மறுத்தால் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிக்கு ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரை கடுங்காவல் சிறைத்தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது.

5. இந்திய மகப்பேறு நலச் சட்டம், 1961 (Maternity Benefit Act) படி, இந்தியாவில் உள்ள எந்தவொரு நிறுவனமும் கர்ப்பிணி பெண்ணை வேலையில் இருந்து நீக்க முடியாது. அவ்வாறு நீக்கினால் சம்பந்தப்பட்ட பெண் வழக்கு தொடரும் பட்சத்தில், அந்த நிறுவன தலைவருக்கு மூன்று வருடம் வரை தண்டனையும், இழப்பீடு அபராத தண்டனையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

6. மோட்டார் வாகன திருத்தச்சட்டம் 2016 (Automotive Amendment Bill, 2016) படி, நீங்கள் ஒரு நாளில் ஏதேனும் ஒரு போக்குவரத்து விதிமீறலுக்காக அபராதம் விதிக்கப்பட்டால் அன்றைய தினம் முழுவதும் அதே தவறுக்காக மீண்டும் அபராதம் விதிக்க முடியாது. எடுத்துக்காட்டாக தலைக்கவசம் அணியாததற்கு நீங்கள் அபராதம் கட்டினால் அன்றைய தினம் (இரவு 12 மணி வரை) தலை கவசம் அணியவில்லை என்பதற்காக மீண்டும் அபராதம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை, அவ்வாறு அபராதம் விதிக்க சட்டத்தில் இடமும் இல்லை.

7. அதிகபட்ச சில்லறை விலை சட்டம் 2014 (MRP Act 2014) படி, இந்தியாவில் எந்தவொரு பொருளையும் அதன் அதன் அதிகப்பட்ச விலையை (MRP) விடக் கூடுதல் விலையில் விற்கக்கூடாது. ஆனால் வாடிக்கையாளர் அதிகபட்ச விலையை விட குறைவாக பேரம் பேசி வாங்கிக் கொள்ள அனுமதி உள்ளது. மேலும் பேரம் பேச எந்த வணிக நிறுவனமும் மறுப்பது சட்ட விரோதமாகும்.

8. இந்திய தண்டனைச்சட்டம் சட்டப்பிரிவு 294 (Indian Penal Code 294) பொது இடங்களில் ஆபாசமாக நடந்துக் கொள்வது, உடலுறவு வைத்துக்கொள்வது சட்ட விரோதமாக கருதப்படுகிறது. இதற்கு மூன்று மாதம் வரை சிறைத்தண்டனை கிடைக்க வழியுள்ளது. ஆபாசம் என்பதற்கு சரியான வரையறை இல்லாததால் பெரும்பாலும் காதலர்கள் போலீசாரால் மிரட்டிப்படுகின்றனர். ஆகவே பொது இடங்களில் சில்மிஷம் செய்வது குற்றம் என சில போலி காதலர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

9. அரசியலமைப்புச் சட்ட விதி 22(1) மற்றும் 22(2) படி, கைது செய்யப்பட்ட ஒரு நபரை காவல்துறையானது 24 மணிநேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிபதியின் முன்னிலையில் நிறுத்த வேண்டும். இதை காவல்துறை செய்ய தவறுவது குற்றமாக கருதப்படும். மேலும் முகாந்திரம் இல்லாமல் ஒருவரை காவல்துறை கைது செய்வதும் சட்டப்படி குற்றமாகும்.

10. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 19 படி, அனைத்து இந்திய குடிமக்களுக்கும் பேச்சு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயுதங்கள் இல்லாமல் அமைதியாக ஒன்று கூடி பேசவும், கருத்துக்களை வெளிப்படுத்தவும், பேச்சு மன்றங்கள் மற்றும் விவாத அமைப்புகளை நடத்தவும், இந்தியாவுக்குள் எங்கும் சென்று வர, இந்தியாவுக்குள் எங்கே வேண்டுமானாலும் குடியேறவும் அனுமதி உண்டு.

11. நீங்கள் இந்துவாகப் பிறந்தாலும், நம்பிக்கையால் கடவுள் இல்லை என்று சொன்னாலும் சட்டத்தின் வாயிலாக நீங்கள் இஸ்லாமியராகவோ, கிருத்துவராகவோ மாறும் மத சுதந்திரத்தை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 25 ஆவது பிரிவு வழங்குகிறது. மத சுதந்திரத்தில் உங்களை எந்த ஒரு தனி நபரோ, அமைப்போ கட்டுப்படுத்த முடியாது.

11. தனியாக வசிக்கும் ஆண், பெண் குழந்தையை தத்தெடுக்க முடியாது. அதே போல ஆண் குழந்தை வைத்திருப்பவர்கள் புதிதாக குழந்தையை தத்தெடுக்க முடியாது. மேலும் திருநங்கைகள், தன்பால் ஈர்ப்பாளர்கள் மற்றும் இதர பாலின சிறுபான்மையினர்கள் குழந்தைகளை தத்தெடுக்க அனுமதி இல்லை. (2011 பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம்)

12. மோட்டார் இல்லாத வாகனங்கள், உதாரணமாக மாட்டுவண்டி, சைக்கிள் போன்றவர்களுக்கு மோட்டார் வாகன சட்டத்தின் படி விதி மீறலுக்கு தண்டனை வழங்க முடியாது.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில், பல்வேறு சட்ட விதிமீறல்களை அரசே துணிந்து செய்வதை காண முடிகிறது. இதன் ஆரம்ப புள்ளி மக்களுக்கு சட்டம் தெரியாது என்ற இடத்திலிருந்து ஆரம்பம் ஆகிறது. இரு ஜனநாயக குடியரசு நாட்டின் வலிமையே மக்கள் தங்களது கருத்துகளை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துகிற சுதந்திரத்தில் தான் அடங்கியுள்ளது என்பதை இந்திய சமூகம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்!

**சட்டத்தின் பார்வையில், ((வக்கீல் திரு ரமேஷ்பாண்டியன்)**

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள: : 044 2674 1007**
திரு வெ அய்யப்பன் தலைவர் : 75501 82438
திரு V கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் : 87783 12823
திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் : 90031 25142
E- Mail : acmchennai2001@yahoo.co.in
Website: anticorruptionchennai.com

## நேர்மையானவர்கள் வாழ்வில் சில சம்பவங்கள்

### நேரு செய்த விபத்து

ஒரு சமயம் காங்கிரஸ் பிரச்சாரத்துக்காக ஜவஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, பூர்ணிமா பானர்ஜி ஆகிய மூவரும் காரில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தனர். காரின் சொந்தக்காரர் பூர்ணிமா பானர்ஜி. அதில் ஜவஹர்லால் நேரு காரை ஓட்டிக் கொண்டிருந்தார்.

"நீங்கள் அதிக தூரம் காரை ஓட்டியதால் மிகவும் களைத்திருக்கிறீர்கள். நீங்கள் ஓய்வெடுங்கள். காரை நான் ஓட்டுகிறேன்" என்றார் பூர்ணிமா பானர்ஜி. "வேண்டாம்! எனக்கு களைப்பு ஏதுமில்லை. காரை நனே ஓட்டுகிறேன்" என்றார் ஜவஹர் லால் நேரு,

இரவு ஒரு மணி வாக்கில் கார் அலகாபாத்தைச் சென்றடைந்தது. அப்போது அருகில் அமர்ந்திருந்த லால் பகதூர் சாஸ்திரி, " என்னை ஆனந்த பவனத்தில் இறக்கி விடுங்கள். அங்கிருந்து என் வீட்டிற்குச் சென்று விடுகிறேன்" என்றார். அந்த இரவு நேரத்தில் அவர் நேருவுக்குச் சிரமம் கொடுக்க விரும்பவில்லை. ஆனால் நேரு அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

"உங்களை உங்கள் வீட்டில் கொண்டு போய் விடுவது தான் முறை!" என்று கூறிவிட்டுக் காரைத் தொடர்ந்து ஓட்டினார் நேரு. ஓரிடத்தில் சற்றும் எதிர் பாராதவிதமாக ரோட்டில் நின்று கொண்டிருந்த ஒரு பசுவின் மீது கார் உராய்ந்து விட்டது. இதனால் பசுவிற்குக் காயம் ஏற்பட்டது. நேரு காரை நிறுத்திவிட்டு இறங்கி சுற்றிலும் பார்த்தார்: யாருமில்லை. அதே சமயம் லால் பகதூர் சாஸ்திரியும் பூர்ணிமா பானர்ஜியும் காரை விட்டு இறங்கி பசுவின் அருகில் வந்தனர்.

"பசுவின் உடலில் இருந்து இரத்தம் கசிகிறதே" என்றார் பூர்ணிமா பானர்ஜி. "ஆமாம்! பசுவின் சொந்தக்காரர் இங்கிருந்தால் நடந்ததை விளக்கலாம். ஆனால் யாரையும் காணோமே" என்றார் நேரு. " சற்று நேரம் பொறுத்திருந்து பார்க்கலாம்" என்றார் லால் பகதூர் சாஸ்திரி.

அந்த இருட்டில்.... நடுரோட்டில் அவர்கள் காத்திருந்தனர், சிறிது நேரம் சென்றபிறகு சிலர் அங்கே வந்தனர். நேரு அந்த பசுவை அவர்களிடம் காட்டி, "இது யாருடைய பசு?" என்று கேட்டார். அதில் ஒருவர் "ஏன்னுடையது ஐயா!" என்றார். நேருவை அவர்கள் அனைவருமே அடையாளம் கண்டுகொண்டு மரியாதையாக நின்றனர். நேரு அவர்களிடம் நடந்த சம்பவத்தைக் கூறினார்.

"பரவாயில்லை ஐயா! தவறுதலாக நேர்ந்து விட்டது தானே, பசுவுக்கு நான் சிகிச்சை செய்து கொள்கிறேன். நீங்கள் செல்லுங்கள்!" என்று பணிவுடன் கூறினார் பசுவின் சொந்தக்காரர். நேரு அவரது பெயர் மற்றும் விலாசத்தைக் கேட்டு குறித்துக் கொண்டார். பிறகு மூவரும் காரில் புறப்பட்டனர்.

முதலில் லால் பகதூர் சாஸ்திரியை அவர் வீட்டில் இறக்கி விட்டுவிட்டு தனது சொந்த இல்லமான ஆனந்த பவனத்துக்கு வந்தார் நேரு. அங்கே வந்தபின் தான் இறங்கிக்கொண்டு பூர்ணிமா பானர்ஜியிடம் காரைக் கொடுத்தனுப்பினார்.

மறுநாள் காலை முதல் வேலையாக, அந்தப்பசுவின் வைத்தியச் செலவுக்காக, அதன் சொந்தக்காரருக்கு 30 ரூபாயை அனுப்பி வைத்தார் மனித நேயம் கொண்ட ஜவஹர்லால் நேரு.

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**
**விளம்பரக்கட்டண விவரம்**
**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

## ஊழலை ஒழிக்க உறுதி கொள்வோம்...!

**தினத்தந்தி ஜனவரி 9,**

வேகமாக வளர்ந்து வரும் நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு இருந்தாலும் ஊழல் மலிந்த நாடு என்ற சிறுமையும் அதற்கு இருக்கத்தான் செய்கிறது. வளர்ந்த நாடுகளிலும் கூட ஊழல் இருக்கிறது என்று ஆறுதல் கொண்டாலும் நம் நாட்டில் நிலவி வரும் ஊழல் அதன் விரைந்த வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது வருத்தம் அளிக்கிறது. ஊழல் என்ற சொல்லுக்கு நரகம், அருவருப்பு, தாறுமாறு என்று அகராதிகள் பொருளுரைக்கும். அருவருக்கத்தக்கது ஊழல் என்பது இதனால் புலனாகும். ஏனெனில் ஒரு நாட்டின் வளர்ச்சியைச் சிதைத்து, நிலைகுலையச் செய்வது ஊழல். ஊழல் என்னும் முறைகேட்டைச் சமுதாய ஒழுக்கக்கேடு என்று கூறலாம். ஊழல் என்று பொதுவாகக் குறிப்பிடப்பெறும் இது முறையற்ற செயல், முறையற்ற பணப்புழக்கம் என்று இரண்டு வழிகளில் நடைபெறுகிறது. முறையற்ற செயல் என்பது அதிகார துஷ்பிரயோகம். அதாவது செல்வாக்கைப் பயன்படுத்தித் தமக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டும் கீழ்த்தனம். தகுதியுடையோரைப் புறந்தள்ளிவிட்டு சிபாரிசின் பேரில் தகுதியற்றவர்களை நியமிக்கும் கள்ளத்தனம். அரசுப் பணிகளிலும் அரசு ஒப்பந்தங்களிலும் இத்தகைய நடைமுறையைக் காணலாம். தனியார் நிறுவனங்களிலும் கூட இத்தகு அவலங்கள் பெருகிவிட்டன. சில நேரங்களில் பணம் கைமாறிக்கொண்டும் சிபாரிசு நடைபெறுகிறது. முறையற்ற பணப்புழக்கம் என்பது லஞ்சம். காரியம் ஆகவேண்டும் என்பதற்காக உயர் அதிகாரிக்கோ, அரசியல்வாதிக்கோ, வேறு எவருக்கோ முறைகேடாகக் கொடுக்கும் பணம் அல்லது பொருள் லஞ்சமாகும்.

- பத்திரப்பதிவு செய்ய உரிய கட்டணம் போக சார்பதிவாளருக்கும் பணம் கொடுக்க வேண்டியிருக்குது'' என்று ஒருவர் புலம்புகிறார்.
- ''பட்டா மாறுதலுக்கு அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் போக நில அளவையாளருக்கு ஐந்தாயிரம் கொடுத்தேன்'' என்று ஒருவர் அங்கலாய்க்கிறார்.
- ''பள்ளி ஆசிரியர் பணிக்கு நாற்பது லட்சம் கேட்கிறார்கள்'' என்பது ஒருவரின் ஆதங்கம். பிள்ளைக்கு எல்.கே.ஜி.யில் இடம் கிடைக்க கணிசமாக ஒரு தொகை வேண்டும்'' என்று கவலைப்படுகிறார் ஒரு தந்தை.
- ''அரசு ஒப்பந்தம் பெறுவதற்கு இரண்டு சதவீதம் கமிஷன் கொடுத்தாக வேண்டும்'' இது ஒப்பந்தக்காரர் ஒருவரின் புலம்பல்.
- ''அரசு தரும் மானியத்தைப் பெறுவதற்கும் ஒரு தொகை கொடுத்தாக வேண்டும்'' என்று ஒருவர் கண்ணீர் வடிக்கிறார்.
- ''பணியிட மாறுதலுக்குப் பல லட்சம் கேட்கிறார்'' என்று ஒருவர் பதறுகிறார். நாடுகளுக்கிடையே நடைபெறும் ஒப்பந்தங்களிலும் ஊழல் மிகுந்துள்ளதாக அன்றாடம் செய்திகள் வருகின்றன. மாதச்சம்பளம் வாங்கும் உயர் அதிகாரிகளும், மக்கள்பணி ஆற்றும் அரசியல்வாதிகளும் லஞ்சக் கையேந்திகள் ஆகிவிட்டனர்.
- சேவை செய்யவேண்டிய பள்ளி நிர்வாகங்களோ பணம் பறிக்கும் கொள்ளைக் கும்பல் ஆகிவிட்டன. இப்படி எல்லாத்துறைகளிலும் கையூட்டு சர்வசாதாரணம் ஆகிவிட்டது.
- ஒரு காலத்தில் இலைமறை பிஞ்சாக இருந்த ஊழல் இப்போது இலையை மறைக்கும் பெரும் பூசணிக்காயாகப் பருத்துவிட்டது.
- ஹீரோயிசத்தால் தனித்தன்மையை இழந்த பாலிவுட் 'கைதி' 'ஊழல் என்பது குற்றமே இல்லை. கொடுப்பதும் வாங்குவதும் தப்பில்லை. இது சகஜம். 'இப்படி ஒரு மனநிலை இளையோரின் மனதில் வேரூன்றிவிட்டது.

இப்படி ஊழல் மலிந்ததற்கு யார் காரணம்? அரசியல்வாதிகளா? அதிகாரிகளா? பொதுமக்களா? இவர்கள் மூவருந்தான். அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் தங்களிடமுள்ள அதிகாரத்தால் எதையும் செய்யலாம் என்று துணிந்துவிட்டார்கள். 100 நாட்களில் 24 நாடுகளுக்கு மோட்டார் சைக்கிள் பயணம் பேராசையும், குறுக்குவழியில் பணம் சம்பாதிக்கும் எண்ணமும் ஊழல் செய்ய அவர்களை உந்தித்தள்ளுகிறது. அதேபோல் எந்த வழியிலாவது காரியத்தை முடிக்கவேண்டும் என்ற பொதுமக்களின் ஆர்வம் அவர்களை ஊழலுக்குத் துணைபோகச் செய்கிறது. மொத்தத்தில் 'யார் எப்படிப் போனால் நமக்கென்ன!!!

நம்ம காரியம் ஆனால் சரி' என்னும் மக்களின் சுயநல உணர்வுதான் ஊழலின் ஊற்றுக் கண்ணாக இருக்கிறது.

லஞ்சம் அல்லது சிபாரிசு என்ற பெயரில் ஒருவரின் நியாயமான உரிமையை மற்றொருவர் தட்டிப் பறிக்க நினைப்பது அநியாயமாகும். ஊழல் தடுப்புச்சட்டம் 1988–ல் இருந்தே நடைமுறையில் உள்ளது. அமைச்சர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் சட்டம் தண்டனை கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றமென்று எல்லோருக்கும் தெரியும். போதாக்குறைக்கு லோக் ஆயுக்தா சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இருந்தாலும் ஊழல் ஒழியாமல் பெருகிக்கொண்டுதான் இருக்கிறது.

தமிழ் படிக்கும் ஜெர்மனியர்கள் 30 ஆண்டுகளாக தொடரும் பந்தம் ஊழலை ஒழிக்க முடியாதா? நாட்டை விட்டு அதனை வெளியேற்ற முடியாதா? முடியும். ஊழலின் ஊற்றுக்கண் அடைக்க முடியாத ஒன்று அன்று. அடைக்கக் கூடியதுதான். அதற்கு மக்களின் மனப்பான்மை மாறவேண்டும். அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் பொதுமக்களுள் அடக்கம்தான். ஒட்டுமொத்த சமுதாயமும் மனம் வைத்தால் ஊழல் எளிதாக ஒழிந்துவிடும். ஊழல் என்பது ஒரு வகையான திருட்டு. அதனால் வரும் பணம் திருட்டுப் பணம். இதனை ஊழல்வாதிகள் உணரவேண்டும். லஞ்சம் கொடுத்துக் காரியம் முடிக்க நினைக்கும் மக்களும் தாம் திருட்டுத்தொழிலுக்கு உடந்தையாக இருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த மனப்பான்மை உருவாவதற்குத் தன்னலமில்லாப் பொதுநலன் கருதும் பெருந்தன்மை இருக்க வேண்டும். தொண்டுள்ளம் கொண்ட அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வரவேண்டும். கடமை உணர்வும், கண்ணியமும் கொண்ட அதிகாரிகள் பணியில் அமரவேண்டும். மக்களிடம் நேரிய நெஞ்சம் இருக்கவேண்டும். இப்படியொரு சூழல் அமைந்தால் ஊழல் ஒழிந்துவிடும். பொத்தல் உள்ள குடத்தில் எவ்வளவு தண்ணீர் ஊற்றினாலும் குடம் நிரம்பாது. அதனைப் போன்று ஊழல் நிறைந்த நாட்டில் எத்தனைத் திட்டங்கள் தீட்டி எவ்வளவு நிதி ஒதுக்கினாலும் குறிப்பிட்ட வளர்ச்சியை அடையமுடியாது. எனவே நாடு நல்வளர்ச்சி பெறுவதற்கு ஊழலை ஒழிக்க உறுதிகொள்வோம்.

**(https://www.dailythanthi.com/News/SirappuKatturaigal/2019/01/08203637/Make-sure-to-eradicate-corruption.vpf?infinitescroll=1)**

-------------------------------------------------------------------------------------------------------------------

## 177 வயதை தொட்ட 'சுலோச்சன முதலியார் பாலம்'..! தனிமனித பங்களிப்பில் உருவான தமிழகத்தின் பிரம்மாண்டம்..!

**Manikandan S R S**

1843 ம் வருடம் நவம்பர் 27ம் தேதி பாலம் திறக்கப்பட, அன்று யானை முன்னே செல்ல பாலம் உருவாகுவதற்கு முழுமுதற்காரணமாக அமைந்த சுலோச்சன முதலியாரையும் அவரது குடும்பத்தினரையும் முதலாவதாக பாலம் வழியாக நடக்கச்செய்து ஆங்கிலேய அரசு கௌரவப்படுத்தியிருக்கிறது. பாலம் உருவாகி தற்போது 177 வயதை தொட்டிருக்கும் நிலையில் பலமுறை ஏற்பட்ட வெள்ளத்தையும் தாங்கி 'சுலோச்சன முதலியார் பாலம்' கம்பீரமாக நிற்கிறது.

தமிழகத்தின் பொதிகை மலையில் உற்பத்தியாகி 128 கிலோமீட்டர் தூரம் பயணித்து தமிழகத்திற்குள்ளேயே கடலில் கலக்கும் ஒரே ஜீவநதியாக தென் எல்லையில் பாய்ந்தோடும் தாமிரபரணி அமைந்திருக்கிறது. தமிழகத்தின் இரட்டை நகரங்களாக வர்ணிக்கப்படும் திருநெல்வேலியையும் பாளையங்கோட்டையையும் பிரித்து செல்லும் தாமிரபரணி, ஸ்ரீவைகுண்டம் கடந்து கடலில் கலக்கிறது. மேற்குத்தொடர்ச்சி மலையில் இருந்து பாய்ந்து வரும் தாமிரபரணி ஆற்றில் அக்காலத்தில் ஏப்ரல், மே மாதங்கள் தவிர மற்ற அனைத்து மாதங்களிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடியிருக்கிறது.

இதனிடையே திருநெல்வேலியில் இருந்து பாளையங்கோட்டைக்கு செல்வதற்கு பாலம் இல்லாத காரணத்தால் மக்கள் ஆற்றில் நீந்தி செல்லும் நிலை இருந்திருக்கிறது. அவ்வாறு செல்லும் போது வயதானவர்கள், குழந்தைகள் என பலர் பலியாகும் சம்பவம்

தொடர்கதையாக இருந்திருக்கிறது. வசதி படைத்தவர்கள் பரிசலில் பணம் கொடுத்து சென்று வந்திருக்கின்றனர். அதிலும் இடம்பிடிப்பதில் அடிதடி, தகராறு என பலமுறை நடந்துள்ளது. பாலம் கட்டுவது தொடர்பாக ஆங்கிலேய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தநிலையில் தான் 1840 ம் ஆண்டு மார்ச் 10 ம் தேதி படகுத்துறையில் கலவரம் வெடிக்கவே அதில் 5 கொல்லப்பட்டனர்





இதன் பிறகு உடனடி நடவடிக்கை எடுத்த அப்போதைய ஆட்சியர் ஈ.பி.தாம்சன், பாலம் கட்டுவதற்கு ஆங்கிலேய தலைமைக்கு அழுத்தம் கொடுத்து வேலைகளை தொடங்கச் செய்தார். கேப்டன் ஃபேபர், பொறியாளரான டபிள்யூ.ஹெச்.ஹார்ஸ்லே தலைமையிலான குழுவினர் பாலம் கட்டுவதற்கான வரைபடத்தை தயாரித்தனர். 760 அடி நீளம், 21.5 அடி அகலம், 60 அடி விட்டம் கொண்ட 11 ஆர்ச்சுக்கள், அவற்றைத் தாங்கிட இரட்டைத் தூண்கள் என பிரமாண்டமான வரைபடம் தயாரானது. அப்போதைய மதிப்பீட்டில் பாலம் கட்டுவதற்கு அரை லட்சம் கணக்கிடப்பட்டது. ஆனால் ஆங்கிலேய அரசு பாலத்திற்கு நிதியை ஒதுக்குவதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் பொதுமக்களிடம் பணம் வசூல் செய்ய முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

அப்போது பாலத்திற்கான முழு செலவையும் ஏற்பதாக ஒருவர் முன்வந்தார். அவர் தான் சுலோச்சன முதலியார். ஆங்கிலேய ஆட்சியரிடம் சிரஸ்தாரராக வேலைபார்த்து பார்த்து வந்த சுலோச்சன முதலியார் செங்கல்பட்டு அருகே இருக்கும் திருமணம் என்கிற கிராமத்தைச் சேர்ந்தவர். மிகப்பெரிய செல்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தந்தை காலத்தில் குடும்பத்துடன் நெல்லைக்கு குடிபெயர்ந்துள்ளனர். மக்களிடம் பணம் வசூலிப்பதை விரும்பாத அவர் தானே பாலம் கட்டுவதற்கு நிதி வழங்குவதாக முடிவெடுக்கிறார். அதற்கு அவரின் மனைவியும் மனமுவந்து தனது நகைகளை கொடுத்து பாலம் கட்ட உதவியிருக்கிறார்.






இதையடுத்து பாலம் கட்டும் வேலைகள் வேகமெடுத்தன. திருநெல்வேலி அருகே இருக்கும் ஒரு கோட்டையில் இருந்து பாறைகள் உடைக்கப்பட்டு கற்கள் கொண்டு வரப்பட்டன. சிறையில் இருந்து கைதிகள் பாலம் கட்டும் பணியில் ஈடுபட 1843 ம் ஆண்டு லண்டனில் உள்ள தேம்ஸ் நதியில் அமைந்துள்ள வெஸ்ட் மினிஸ்டர் பாலத்தைப் போன்று பிரமாண்டமாக உருவாகியது. பாலத்திற்கு திறப்பு விழா வேலைகள் தடபுடலாக நடைபெற்று வந்தது. அப்போது என்ன பெயர் வைப்பது என்று அனைவரும் சிந்திக்க, சற்றும் யோசிக்காமல் பாலம் வழங்க நன்கொடை வழங்கிய சுலோச்சன முதலியார் பெயரை வைக்க ஆட்சியர் உத்தரவிடுகிறார். இப்போதும் அதே பெயரில் தான் பாலம் அழைக்கப்படுகிறது.

1843 ம் வருடம் நவம்பர் 27 ம் தேதி பாலம் திறக்கப்பட, அன்று யானை முன்னே செல்ல பாலம் உருவாகுவதற்கு முழுமுதற்காரணமாக அமைந்த சுலோச்சன முதலியாரையும் அவரது குடும்பத்தினரையும் முதலாவதாக பாலம் வழியாக நடக்கச்செய்து ஆங்கிலேய அரசு கௌரவப்படுத்தியிருக்கிறது. பாலம் உருவாகி தற்போது 177 வயதை தொட்டிருக்கும் நிலையில் பலமுறை ஏற்பட்ட வெள்ளத்தையும் தாங்கி 'சுலோச்சன முதலியார் பாலம்' கம்பீரமாக நிற்கிறது. திருநெல்வேலியையும் பாளையங்கோட்டையையும் இணைக்கும் முக்கிய வழியான இதன் அருகே தற்போது 18 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டும் பணிகள் நிறைவடையும் தருவாயில் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் பாலம் திறக்கப்பட்ட நாளில் சமூக ஆர்வலர்கள் ஒன்று திரண்டு பாலத்தின் கல்வெட்டிற்கு மாலை அணிவித்து மரியாதையை செய்கின்றனர். பாலத்தை புராதன சின்னமாக பாதுகாக்க வேண்டும் என்றும், பாலம் தோன்றிய நாளில் அரசு சார்பாக விழா எடுக்க வேண்டும் என்றும் நெல்லை மாவட்ட எழுத்தாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

**176 ஆண்டுகளாக மழை,வெள்ளம், புயல் என அனைத்தையும் தாங்கி சுண்ணாம்புச் சாந்து போன்றவை பயன்படுத்தி கட்டப்பட்டு கம்பீரமாக காட்சியளிக்கும் 'சுலோச்சன முதலியார் பாலம்' திருநெல்வேலிக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழகத்திற்கே பெருமை தான்!**

## எந்த புகாரை யாரிடம் கூறுவது?

| பிரச்சனைகள் | யாரிடம் முறையிடுவது |
|---|---|
| 1. நியாய விலைகடை பிரச்சனைகள் அனைத்திற்கும் பொருட்களை கட்டாய விற்பனை. | வட்டார வழங்கல் அதிகாரி<br>தாலுகா அலுவலகம் |
| 2. நியாய விலைக்கடையிலிருந்து பொருட்கள் கடத்துதல், பொருட்களை திருடி விற்பது. | மாவட்ட வழங்கல் அலுவலர்<br>மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் |
| 3. எடை அளவு குறைகள், பாக்கெட் பொருட்கள் கூடுதல் விலை விற்பது, தவறான எடைக்கற்கள், தராசு அளவினை குறைத்தல். | 1. எடைக் கட்டுப்பாடு அலுவலகம்<br>2. எடை அளவு கட்டுப்பாடு அலுவலர் (தொழிலாளர் நல அலுவலர்) |
| 4. மில் சீல் இல்லாத துணி வகைகள் போலி துணிகள், மலிவு விலை என்று தரமில்லாத துணி வகைகள் காலாவதியான துணிகள். | உதவி இயக்குனர்,<br>கைத்தறி மற்றும் துணிகள் துறை,<br>................................ மாவட்டம் |
| 5. கலப்படம் :<br>உணவுபொருள், பாட்டிலில் அடைக்கப்பட்ட பழரசங்கள், எண்ணை மற்றும் அனைத்து உணவுப் பொருட்கள் மற்றும் துப்புரவுப் பணிகளில் குறைபாடுகள் | 1. நகராட்சி மற்றும் மாநகராட்சி – சுகாதார அலுவலர்.<br>2. தாலுகா மற்றும் கிராமப் பகுதி இணை இயக்குநர்,<br>மாவட்ட சுகாதார அலுவலகம். |
| 6. உரம், பூச்சி மருந்து, விதைகள் தரக்குறைவு. | துணை வேளாண்மை இயக்குனர்,<br>வேளாண்மைத்துறை. |
| 7. சந்தேகப்படும் கலப்பட உணவுப் பொருட்களில் மாதிரி எடுத்து பரிசோதனைக்கு அனுப்ப, | அரசு பகுப்பு ஆய்வாளர்,<br>அரசு உணவு பரிசோதனைக்கூடம், கிண்டி, சென்னை–600 032. |
| 8. காற்று, நீர், அசுத்தக் கலப்படம், சுற்றுப்புறச் சூழல், சுகாதாரக் கேடுகள், தொழிற்சாலை, சிமெண்ட் சாராணம், புகை நாற்றம் ஆகியவை | 1. சுகாதார அலுவலர், நகராட்சி.<br>2. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>மாசு கட்டுப்பாடு வாரியம் |
| 9. குலுக்கல் சீட்டு, பரிசு சீட்டுக் குலுக்கல், தவணை முறை குலுக்கல் திட்டம். | காவல்துறை ஆய்வாளர்<br>(அப்பகுதி காவல் நிலையம்) |
| 10. பஸ் – ஸ்டாண்ட், சைக்கிள் நிறுத்தும் இடம், கட்டணக் கழிப்பிடம் ஆகியவற்றில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேல் வசூலிக்கும் குற்றங்கள். | 1. ஆணையாளர், நகராட்சி அலுவலகம்.<br>2. மாவட்ட ஆட்சித் தலைவர்,<br>மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகம். |
| 11. சினிமா கொட்டகைகளில் அனுமதிக்கப்பட்டதற்கு அதிக எண்ணிக்கை டிக்கெட்டுகள் விற்பது ஏ.சி. இயங்காதது கழிப்பிட அசுத்தங்கள் ஆகிய அனைத்தும் புகார்கள். | 1. வணிகவரி அலுவலர்.<br>2. மாவட்ட ஆட்சித் தலைவர்.<br>3. துணை உதவி ஆட்சித் தலைவர். |

## இயக்கத்தில் இணைந்தவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்

## 2023-24 இல் இணைந்தவர்களின் ஆண்டு உறுப்பினர்கள் பெயர் மற்றும் முகவரி

| | | |
|---|---|---|
| **1. ஜெ.மனோகர்<br>4/33,அனுமந்தராய கோயில் தெரு<br>ஓட்டேரி<br>சென்னை-600012<br>தொ.எண்- 8667674728** | **4. அ.பழனி<br>289,1வது தெரு<br>ராஜீவ் காந்தி நகர்<br>ஊரப்பாக்கம்<br>செங்கல்பட்டு-603210<br>தொ.எண்- 9941332574** | **14. ஜெ.கோதண்ட ராமன்<br>2/103,சித்தூர் ரோடு<br>கே.ஜி.கண்டிகை<br>திருவள்ளூர்-631205<br>தொ.எண்- 9626438039** |
| **2. ரவிகுமார்<br>36/18அ,பாக்சன் தெரு<br>பெரம்பூர்<br>சென்னை-600011<br>தொ.எண் - 9841114835** | **12. டி.துரைகண்ணு<br>17,3 வது தெரு<br>அரகீஸ்வரர் காலணி<br>குரோம்பேட்டை<br>சென்னை-600044<br>தொ.எண்- 840439951** | **15. அ.பழனி<br>289,1வது தெரு<br>ராஜீவ் காந்தி நகர்<br>ஊரபாக்கம்<br>செங்கல்பட்டு-603210<br>தொ.எண்- 941332574** |
| **3. சூரிநாராயணன்<br>5/361,மூகாம்பிகை நகர்<br>சிக்காயபுரம்,<br>கோவூர்<br>சென்னை-600122<br>தொ.எ.ண்- 9884942454** | **13.<br>இ.பிரிட்டோராஜ்குமார்<br>எ-25,கார்திகேயன் சாலை<br>பெரியார் நகர்<br>சென்னை-600024<br>தொ.எண்:- 445158334** | **16. டி.அய்யப்பன்<br>3/54,கலைஞர் தெரு<br>வி.டி.சி.மதுரவாசல்<br>பனையஞ்சேரி அஞ்சல்<br>ஊத்துகோட்டை தாலுகா<br>திருவள்ளூர்-601101<br>தொ.எ.ண்- 9342089155** |
| **17. என்.சாந்தகுமார்<br>23/4,கணக்கர் தெரு<br>ஜவஹர் நகர்<br>அகரம்<br>சென்னை-600022<br>தொ.எ.ண்- 9884510791** | | |

## EXECUTIVE COMMITTEE MEMBERS

| | | |
|---|---|---|
| President | : Thiru.V.Ayyappan | 75501 82438 |
| Vice President | (Vacant) | |
| Gen Secretary | : Thiru V Karthikai Rajan | 87783 12823 |
| Secretary (Finance) | : Thiru.B.Balaji | 93810 02983 |
| Secretary (Action Plan) | : Thiru.B.Balaji | 93810 02983 |
| Secretary (HQ) | :Thiru.J.Manohar | 98410 61748 |
| Secretary (Cultural Activity) | :Thiru.N.Santha kumar | 98845 10791 |
| Secretary (Publications) | : Thiru G Govindasamy | 98410 26766 |
| Secretary (Public Relations) | :Thiru.N.Gunasekaran | 63803 60797 |
| Secretary (Legal Affairs) | :Thiru.A.Nafees Ahemed | 98418 03685 |
| Secretary (Training) | (Vacant) | |

₹6,000 லஞ்சம் வாங்கிய வழக்கில்

# ஓய்வு இன்ஸ்பெக்டருக்கு 5 ஆண்டு சிறை

**திருச்சி ஊழல் தடுப்பு சிறப்பு கோர்ட் அதிரடி**

திருச்சி, மார்ச் 29: அடிதடி வழக்கில், விவசாயியை சிறைக்கு அனுப்பாமல் காவல்நிலைய பிணையில் விட ₹6 ஆயிரம் லஞ்சம் வாங்கிய வழக்கில் ஓய்வு இன்ஸ்பெக்டருக்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதித்து திருச்சி ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

திருச்சி மாவட்டம், பெரகம்பியை சேர்ந்த விவசாயி சீனிவாசன். இவர் மீதான அடிதடி வழக்கில் சிறைக்கு அனுப்பாமல் குற்றத்தை குறைத்து பதிவு செய்து, காவல் நிலைய பிணையில் விடுவிக்க ₹6 ஆயிரம் லஞ்சமாக கொடுக்கும்படி சிறுகனூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் செல்வராஜ் (72) கேட்டுள்ளார். இதில் லஞ்சம் கொடுக்க விரும்பாத சீனிவாசன், இதுதொடர்பாக லஞ்ச ஒழிப்பு துறையிடம் புகார் செய்தார்.

இதையடுத்து, லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் ஏற்பாட்டின் பேரில் கடந்த 2006 நவம்பர் 1ம் தேதி விவசாயி சீனிவாசன், இன்ஸ்பெக்டர் செல்வராஜிடம் ₹6 ஆயிரம் கொடுத்தார். அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார், செல்வராஜை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். இந்த வழக்கானது திருச்சி மாவட்ட ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.


செல்வராஜ்.

விசாரணை முடிந்த நிலையில், நீதிபதி கார்த்திகேயன் நேற்று தீர்ப்பு வழங்கினார். அதில், ஓய்வு பெற்ற இன்ஸ்பெக்டர் செல்வராஜ் லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக ஒரு ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும், ₹10,000 அபராதமும், இந்த அபராதத்தை கட்டத்தவறினால் 6 மாதம் சிறை தண்டனையும், மேலும் அரசு பதவியை தவறாக பயன்படுத்திய குற்றத்திற்காக 5 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும், ₹10,000 அபராதமும், இந்த அபராதத்தை கட்ட தவறினால் 6மாதம் சிறை தண்டனையும் விதித்ததோடு, இந்த தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

இந்த வழக்கில், குற்றவாளியை பொறி வைத்து பிடித்து சிறப்பாக செயல்பட்ட அப்போதைய இன்ஸ்பெக்டர் பிரசன்ன வெங்கடேஷ், தீவிர புலன் விசாரணை செய்து நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த டிஎஸ்பி அம்பிகாபதி, சாட்சிகளை நீதிமன்றத்தில் திறம்பட ஆஜர்படுத்திய விஜிலென்ஸ் டிஎஸ்பி மணிகண்டன், அரசு வக்கீல் சுரேஷ்குமார் இந்த வழக்கை திறம்பட நடத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்று தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பத்திரப்பதிவுக்கு லஞ்சம் பெற்ற

# பல்லாவரம் சார்பதிவாளர் இடைத்தரகர் கைது

**லஞ்ச ஒழிப்பு போலீஸ் அதிரடி**

தாம்பரம், மார்ச் 30: பத்திரப்பதிவுக்காக லஞ்சம் வாங்கிய சார்பதிவாளர், இடைத்தரகர் ஆகிய 2 பேரை, லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் கைது செய்தனர்.

குரோம்பேட்டை, நியூ காலனி, 2வது பிரதான சாலையில் பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிறது. இங்கு, பொறுப்பு சார்பதிவாளராக செந்தில்குமார் பணியாற்றி வருகிறார். இவர், பத்திரப்பதிவுக்காக வரும்பொதுமக்களிடம் தொடர்ந்து லஞ்சம் பெற்று வருவதாக லஞ்ச ஒழிப்பு துறைக்கு, ரகசிய தகவல்கள் கிடைத்தன.


சிவகுமார், செந்தில்குமார்

இந்நிலையில், கோவிலம்பாக்கம் கொளத்தூர் மாரியம்மன் கோயில் 6வது தெருவை சேர்ந்த சரவணன் என்பவரது பூர்வீக சொத்தான 1098 சதுர அடி நிலம் கோவிலம்பாக்கத்தில் உள்ளது. இவரது தந்தை கடந்த 2013ம் ஆண்டு இறந்துள்ளார். அப்போது, சரவணன் 13 வயதுடையவராக இருந்ததால் இந்த சொத்துக்கான பட்டாவில் சரவணன் பெயரும் அவருடைய தாயாரின் பெயரும் இருந்தது.

தற்போது சரவணனின் சகோதரி திருமணத்திற்காக சொத்தை வங்கியில் அடமானம் வைக்க சென்றபோது வங்கியில் செட்டில்மெண்ட் பத்திரத்தில் பெயரை மாற்றி வரும்படி கேட்டுள்ளனர். எனவே, சரவணன் நேற்று (28.3.2023) குரோம்பேட்டையில் உள்ள பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பெயர் மாற்றம் செய்ய சார்பதிவாளர் செந்தில்குமாரை சந்தித்துள்ளார். அப்போது, சார்பதிவாளர் செந்தில்குமார் பத்திரத்தில் பெயர் மாற்றம் செய்து தர தனக்கு ரூபாய் 5000 லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். பின்னர் லஞ்ச பணத்தை ரூபாய் 2000 ஆக குறைத்துக்கொண்டுள்ளார்.

ஆனால், லஞ்சம் கொடுக்க விரும்பாத சரவணன் சென்னை லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின்பேரில், சார்பதிவாளர் செந்தில்குமாரை கையும் களவுமாக பிடிக்க லஞ்ச ஒழிப்பு போலீசார் திட்டமிட்டனர். புகார் அளித்த சரவணனிடம் ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை கொடுத்து, சார்பதிவாளர் செந்தில்குமாரிடம் கொடுக்குமாறு கூறி அனுப்பியதோடு, லஞ்ச ஒழிப்பு டிஎஸ்பி ஜாய்தயாள் தலைமையில், 10க்கும் மேற்பட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகம் அருகே மறைந்திருந்தனர். சார்பதிவாளர் செந்தில்குமார் ₹2 ஆயிரத்தை லஞ்சமாக பெற்றபோது, அவரை கையும் களவுமாக பிடித்தனர். மேலும், செந்தில்குமாருக்கு வழக்கமாக லஞ்ச பணம் பெற்று தரும், இடைத்தரகர் சிவகுமாரையும் கைது செய்தனர்.

மரத்தை வெட்ட அனுமதி அளிக்க

# ₹2,000 லஞ்சம் வாங்கிய களியல் வி.ஏ.ஓ. கைது

**லஞ்ச ஒழிப்பு போலீசிடம் கையும் களவுமாக சிக்கினார்**


களியல் கிராம நிர்வாக அலுவலர் முத்துவிடம் லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்தினர். (உள்படம்) கிராம நிர்வாக அலுவலர் முத்து.

அருமனை, மார்ச் 30: களியல் அருகே பட்டா நிலத்தில் உள்ள மரத்தை வெட்ட அனுமதி அளிக்க ₹2 ஆயிரம் லஞ்சம் வாங்கிய கிராம நிர்வாக அதிகாரி கைது செய்யப்பட்டார்.

குமரி மாவட்டம் பத்துக்காணியை சேர்ந்தவர் புரோன். இவர் தனது பட்டா நிலத்தில் இருந்த மரங்களை வெட்ட அனுமதிக்கோரி, களியல் கிராம நிர்வாக அலுவலர் முத்துவிடம் மனு அளித்திருந்தார். இதை விசாரித்த கிராம நிர்வாக அதிகாரி முத்து, மரத்தை வெட்ட அனுமதி அளிக்க ₹3 ஆயிரம் லஞ்சம் கேட்டார். ஆனால் புரோன், தன்னால் ₹3 ஆயிரம் தர முடியாது என கூறினார். பின்னர் ரூ.2 ஆயிரம்பட்டும் தருமாறு கிராம நிர்வாக அதிகாரி முத்து கூறினார். இதற்கு சம்மதம் தெரிவித்த புரோன் இது தொடர்பாக குமரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளித்தார்.

இதையடுத்து லஞ்ச ஒழிப்பு போலீசார் ஆலோசனையின் பேரில் நேற்று காலை 10 மணியளவில் அலுவலகத்தில் இருந்த கிராம நிர்வாக அதிகாரி முத்துவிடம், புரோன் ரசாயன பொடி தடவிய ₹2 ஆயிரம் லஞ்ச பணத்தை கொடுக்க சென்றார். அப்போது அலுவலகத்தில் இருக்கையில் இருந்தவாறு புரோனிடம் இருந்து ரூ.2 ஆயிரம் லஞ்ச பணத்தை முத்து வாங்கினார். அப்போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும், களவுமாக முத்துவை பிடித்தனர். பின்னர் அவரிடம் லஞ்ச ஒழிப்பு டிஎஸ்பி. ஹெக்டேர் தர்மராஜ் தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணைக்கு பின், முத்து கைது செய்யப்பட்டார். பின்னர் அலுவலகத்திலும், முத்து வாடகைக்கு உள்ள குழித்துறை வீட்டிலும் சோதனை நடந்தது.

இந்த சோதனைக்கு பின் முத்துவை நாகர்கோவில் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். கைதாகி உள்ள முத்து தென்காசி மாவட்டம் சிவகிரி அருகே உள்ள ராயகிரி பகுதியை சேர்ந்தவர் ஆவார். ₹2 ஆயிரம் லஞ்ச வாங்கிய கிராம நிர்வாக அதிகாரி கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

திருவண்ணாமலையில் புதிய வீட்டுக்கு மின் இணைப்பு வழங்க

# விவசாயியிடம் ₹15 ஆயிரம் லஞ்சம் வாங்கிய மின்வாரிய பெண் ஊழியர் அதிரடி கைது

## லஞ்ச ஒழிப்பு போலீசார் நடவடிக்கை

திருவண்ணாமலை, மார்ச் 30: திருவண்ணாமலை அடுத்த சேலப்பந்தல் மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்தவர் வெங்கடாசலம்(70), விவசாயி. இவருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள் உள்ளனர். இவரது இளைய மகன் கார்த்தி, அதே கிராமத்தில் புதிய வீடு கட்டியுள்ளார். எனவே, தனது மகன் கட்டியுள்ள வீட்டுக்கு மின் இணைப்பு கேட்டு மல்லவாடியில் உள்ள மின்வாரிய இளநிலை பொறியாளர் அலுவலகத்தில் கடந்த 21ம்தேதி வெங்கடாசலம் விண்ணப்பித்தார்.

அப்போது, அவரது விண்ணப்பத்தைபெற்றுக் கொண்ட வணிக ஆய்வாளர் தேவி(32), கடந்த 24ம் தேதி சம்பந்தப்பட்ட வீட்டுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். அனைத்து ஆவணங்களும் சரியாக இருப்பதை உறுதி செய்து கொண்டார். ஆனாலும், மின் இணைப்பு வழங்க ₹15 ஆயிரம் கொடுத்தால் தான் வீட்டுக்கு மின் இணைப்பு வழங்க முடியும் என தெரிவித்துள்ளார்.

அதனால், அதிர்ச்சியடைந்த விவசாயி வெங்கடாசலம், மின் இணைப்பு கட்டணம் ₹5 ஆயிரம் மட்டும் தானே என கேட்டுள்ளார். அதற்கு, மின் கட்டணம் ₹5 ஆயிரமும், லஞ்சமாக ₹10 ஆயிரமும் தர வேண்டும் எனவும், அதை என்னுடைய மேல் அதிகாரிகளுக்கும் நான் பிரித்துகொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆனால், லஞ்சம் கொடுத்து மின் இணைப்பு பெறவிரும்பாத விவசாயி வெங்கடாசலம், இதுகுறித்து திருவண்ணாமலை மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசில் புகார் அளித்தார். இது தொடர்பாக முதற்கட்ட விசாரணை நடத்திய லஞ்ச ஒழிப்பு போலீசார், புகாரின் உண்மைத் தன்மையை உறுதி செய்தனர். எனவே, சம்பந்தப்பட்ட வணிக ஆய்வாளர் தேவியை கையும் களவுமாக பிடிக்க திட்டமிட்டனர்.


▸ தேவி

அதைத்தொடர்ந்து, ரூபாய் நோட்டுக்களை விவசாயி வெங்கடாசலத்திடம் கொடுத்து அனுப்பினர். திட்டமிட்டபடி, மல்லவாடி மின்வாரிய அலுவலகத்தில் வணிக ஆய்வாளர் தேவியிடம் நேற்று மாலை விவசாயி வெங்கடாசலம் ₹15 ஆயிரத்தை கொடுத்தார். அதை வாங்கிகொண்ட வணிக ஆய்வாளர் தேவி, தனது பையில் வைக்கும் போது, அங்கு மறைந்து காத்திருந்த லஞ்ச ஒழிப்பு பிரிவு டிஎஸ்பி வேல்முருகன், இன்ஸ்பெக்டர் ஹேமமாலினி மற்றும் ஏட்டுக்கள் கோபிநாத், முருகன், சரவணன் உள்ளிட்டோர் கையும் களவுமாக தேவியை கைது செய்தனர்.

அதைத்தொடர்ந்து, 3 மணிநேரம் விசாரணை நடந்தது மேலும், அலுவலகத்தில் இருந்து பல்வேறு ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

தொடர்ந்து நடத்திய விசாரணையில், வணிக ஆய்வாளர் தேவி, கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த அலுவலகத்தில் பணிபுரிவதும், இவர் மீது ஏற்கனவே லஞ்சம் வாங்குவதாக பல்வேறு புகார்கள் இருந்ததும் தெரியவந்துள்ளது.

மின்வாரிய அலுவலகத்தில் லஞ்சம் வாங்கிய பெண் ஊழியர் கைது செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

கடை நடத்த வரி ரசீது போடுவதற்காக

# ₹5000 லஞ்சம் வாங்கிய கோயில் எழுத்தர் கைது

## லஞ்ச ஒழிப்புதுறை அதிரடி

பெரம்பலூர், மார்ச் 30: பெரம்பலூரில் கடை நடத்த வரி ரசீது போடுவதற்காக ₹5 ஆயிரம் லஞ்சம் வாங்கிய கோயில் எழுத்தரை லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் கைது செய்தனர்.

சிவகங்கையை சேர்ந்தவர் ரவி(58). பெரம்பலூர் மேற்கு வானொலித்தில் அருகே மரகதவள்ளி தாயார் சமேத மதனகோபால சுவாமி கோவிலில் எழுத்தராக பணிபுரிந்து வருகிறார். பெரம்பலூர், காந்திநகரை சேர்ந்தவர் சிங்காரம்(45). மதனகோபாலசாமி கோவிலுக்கு சொந்தமான இடத்தில் சலூன்கடை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் இந்த கடைக்கு ஆண்டு வரி செலுத்துவதற்காக வரி ரசீது போடும் படி கோயில் எழுத்தர் ரவியிடம், சிங்காரம் கேட்டுள்ளார். ₹5 ஆயிரம் லஞ்சம் கொடுத்தால்தான் வரி ரசீது போட முடியும் என கோயில் எழுத்தர், கறாராக கூறியதாக தெரிகிறது. இதில் லஞ்சம் கொடுக்க விரும்பாத சிங்காரம், பெரம்பலூர் லஞ்சஒழிப்புத்துறையில் புகார் தெரிவித்தார்.


▸ எழுத்தர் ரவி

லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாரின் ஆலோசனையின் பேரில், ரசாயண பவுடர் தடவிய ₹5 ஆயிரத்துடன் கோவில் எதிரே உள்ள செயல் அலுவலர் அறைக்கு நேற்று வந்த சிங்காரம், அங்கிருந்த எழுத்தர் ரவியிடம் பணத்தை கொடுத்துள்ளார். அப்போது அங்கு மறைந்திருந்த டிஎஸ்பி ஹேமசித்ரா தலைமையில் இன்ஸ்பெக்டர் ராமேஸ்வரி மற்றும் போலீசார் அதிரடியாக உள்ளே புகுந்து கையும் களவுமாக ரவியை கைது செய்தனர். இதுதொடர்பாக அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்தது.

மருத்துவருக்கு ஓய்வூதிய பணப்பலன் வழங்க

# ₹30,000 லஞ்சம் வாங்கிய மருத்துவமனை ஊழியர் கைது

புழல் காவாங்கரையை சேர்ந்தவர் சங்கர். பழவேற்காடு அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவருக்கு ஓய்வூதியம் உள்ளிட்ட பணப் பலன்களுக்கான சான்று வழங்க பழவேற்காடு மருத்துவமனை ஊழியர் லோகேஷ் (உதவியாளர்) சுமார் ₹1 லட்சம் வரை லஞ்சம் கேட்டதாக கூறப்படுகிறது.


▸ லோகேஷ்

உடல்நலம் சரியில்லாத தமது மனைவியின் மருத்துவ சிகிச்சைக்காக அவசரமாக பணம் வேண்டும் என மருத்துவர் சங்கர் கேட்டுள்ளார். இருப்பினும், பணத்தை கொடுத்தால் மட்டுமே சான்று வழங்க முடியும் என லோகேஷ் திட்டவட்டமாக தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதனால், மனமுடைந்த மருத்துவர் சங்கர், இது தொடர்பாக திருவள்ளூர் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் அளித்தார்.

இதை தொடர்ந்து, லஞ்ச ஒழிப்பு போலீசார் அறிவுரையின் பேரில் மருத்துவர் சங்கர் பழவேற்காடு மருத்துவமனையில் ரசாயணம் தடவிய ₹30,000 பணத்தை லோகேஷ் உதவியாளர் ரமேஷிடம் வழங்கினார். அப்போது, மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் ரமேஷிடம் விசாரணை நடத்தியதில், மருத்துவமனை ஊழியர் லோகேஷிற்காக லஞ்சம் வாங்கியதை ஒப்புக்கொண்டார்.

விசாரணையில் ரமேஷிக்கு முழு சம்மதம் இல்லை என தெரிய வந்தது. இதனை தொடர்ந்து, லோகேஷை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர். இதனிடையே ஓய்வு பெற்ற மருத்துவர் சங்கரிடம் மருத்துவமனை ஊழியர் லோகேஷ் லஞ்சப்பணம் கேட்டு பேசும் ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### வருவாய்த்துறை அலுவலகத்தில் சோதனை

பொன்னேரி வருவாய்த்துறை அலுவலகத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா வழங்கியது தொடர்பான புகார் வந்தது. இதுகுறித்தும் லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்தியதால் வருவாய்த்துறையினர் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது.

அம்பை சரகத்தில், 30 பேர் பல் பிடுங்கப்பட்டதாக குற்றச்சாட்டு:

# போலீஸ் அதிகாரி மீதான புகார் குறித்து உதவி கலெக்டர் விசாரணை தொடங்கியது

## 3 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டது

நெல்லை, மார்ச் 28- குற்ற செயல்களில் ஈடுபட்ட 30 பேரின் பல் பிடுங்கப்பட்டதாக அம்பை உதவி போலீஸ் சூப்பிரண்டு மீது எழுந்த புகார் குறித்து சேரன்மாதேவி உதவி கலெக்டர் விசாரணையை தொடங்கினார்.

### பல் பிடுங்கியதாக புகார்

நெல்லை மாவட்டம் அம்பை போலீஸ் சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற குற்ற சம்பவங்கள் தொடர்பாக உதவி போலீஸ் சூப்பிரண்டு பல்வீர்சிங் விசாரணை நடத்தி வந்தார்.

அப்போது குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை விசாரணை என்ற பெயரில் அழைத்து சென்று வாயில் கற்களை போட்டு, அவர்களது பற்களை பிடுங்கி கொடூர செயலில் அவர் ஈடுபடுவதாக சமீபத்தில் சிலர் புகார் கூறினர். பற்களை பிடுங்கி காயம் ஏற்படுத்தியதாக சமூக வலைதளங்களிலும் தகவல்கள் பரப்பப்பட்டு வந்தது.

### கலெக்டர் உத்தரவு

இதுதொடர்பாக நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலும் புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த கலெக்டர் கார்த்திகேயன் உத்தரவிட்டார்.

இந்தநிலையில் இதுபற்றி விசாரிக்க, சேரன்மாதேவி உதவி கலெக்டர் முகமது சபீர் ஆலம் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்ட தகவலின் உண்மை தன்மையை ஆராயவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.


பாதிக்கப்பட்டவர்கள்


பல்வீர் சிங்

### அறிக்கை தாக்கல்

மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் இந்த விசாரணை நடைபெறும் எனவும், இந்த சம்பவத்தில் ஈடுபட்ட அதிகாரிகள், பாதிக்கப்பட்டவர்கள் என அனைத்து தரப்பினரிடமும் உரிய விசாரணை நடத்தி அறிக்கைதாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டு உள்ளதாகவும் மாவட்ட கலெக்டர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தசம்பவம் தொடர்பாக போராட்டங்களை நடத்த சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகள் திட்டமிட்டிருந்தன. இதற்காக 2 நாட்களுக்கு முன்பு பாதிக்கப்பட்டவர்களை ஒன்று திரட்டி சிலர் விளக்கங்களை கேட்டனர். இந்தநிலையில் விசாரணை நடத்த மாவட்ட கலெக்டர் கார்த்திகேயன் உத்தரவிட்டுள்ளார்.

### 30 பேர்

இதுவரையில் அம்பை சரகத்திற்கு உட்பட்ட அம்பை, கல்லிடைக்குறிச்சி, விக்கிரமசிங்கபுரம், பாப்பாக்குடி, அம்பை மகளிர் போலீஸ் நிலையம் ஆகிய 5 போலீஸ் நிலைய எல்லைப்பகுதியில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட 30-க்கும் மேற்பட்டோர் தங்களது பற்களை இழந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக சேரன்மாதேவி உதவி கலெக்டர் முகமது சபீர் ஆலம் தனது விசாரணையை நேற்று தொடங்கினார்.

### சம்மன்

பாதிக்கப்பட்ட லட்சுமி சங்கர், சுபாஷ், வெங்கடேஷ் ஆகிய 3 பேருக்கு உதவி கலெக்டர் அலுவலகம் மூலம், விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்று சம்மன் அனுப்பப்பட்டது. அந்த சம்மன் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டது.

மேலும் சம்மனை பெற்றுக் கொண்டு அந்தப் பகுதி கிராம நிர்வாக அலுவலர்களுடன் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### பணியில் இருந்தவர்கள் யார்?

இதற்கிடையே, பல் பிடுங்கப்பட்ட சம்பவம் குறித்தும், கைது செய்யப்பட்டவர்கள் விவரம், அப்போது போலீஸ் அதிகாரிகள் யார்? யார்? பணியில் இருந்தார்கள்? என்பது குறித்தும் உதவி கலெக்டர் விசாரணை நடத்தி வருகிறார்.

மேலும் அந்தப் பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை கொண்டும் விசாரணை நடைபெறுகிறது.


இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

நேர்மை நெறி- 2023

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCN/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20

## சுரண்டப்படும் சாமாண்யன் வாழ்க்கை




| | | |
|---|---|---|
| 1 | • The Poor | Work & Work |
| 2 | • The Rich | Exploit The Poor |
| 3 | • The Soldier | Protects Both |
| 4 | • The Tax Payer | Pays For All Three |
| 5 | • The Banker | Robs All Four |
| 6 | • The Lawyer | Misleads All Five |
| 7 | • The Doctor | Bills All Six |
| 8 | • The Goons | Scare All Of Seven |
| 9 | • The Politician | Lives Happily On Account Of All Eight |
| Written in 43 B.C | | Valid Even Today |

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின்
**திங்களிதழ்**

ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்

வெளியீட்டுச் செயலாளர் : ஜி கோவிந்தசாமி:

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 April 2023
Due to corona published online)

**வாக்கு தெரிந்தவனுக்கு வாத்தியார் வேலை;
போக்கு தெரிந்தவனுக்கு போலீஸ் வேலை.**

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO
**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, “Nambakam” Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!